பங்குனி **1989**
**MARCH**

# கமநலம்



# கமநலம்

மலர் : 16 ★ பங்குனி 1989 ★ இதழ் : 1

பிரதம ஆசிரியர் :

ஜே. அல்விஸ்

ஆசிரியர் :

சோ. நாமேஸ்வரன்

ஆசிரியர் குழு :

ஜே. பி. அபேசிங்க
கே. எ. எஸ். தயானந்த
நதிஷா சேனநாயக்க
ஜி. ராமநாயக்க
ஆர். டி. வணிகரத்ன
எல். பி. ரூபசேன
டி. தென்னக்கோன்

## பொருளடக்கம்

பக்கம்

1. சனசக்தி மூலம் வளர்ச்சிக்கான உறுதிப்பாடு
5. இலங்கையின் வறுமை நிலை
11. கமத்துறைக்குப் புதிய நோக்கு வேண்டும்
15. சனசக்தி – வறுமையில் வாடும் குடும்பத்திற்கு ஒரு வரப்பிரசாதம்
19. கமச்செய்கையில் கிடைக்கும் கழிவுப்பொருட்கள் தகுந்தவாறு பயன்படுத்தினால் நன்மை
21. சந்தையின் அபிவிருத்தி பொருளாதார மேம்பாட்டுக்கு வழி
24. சனசக்தி செயல் திட்டம் இளைஞர் கழகங்களின் பொறுப்பு

விலை : (தனிப்பிரதி) ரூ. 5.00
ஆண்டுச்சந்தா : ரூ. 20.00

கமக்காரர்கள் மத்தியில் தன்னம்பிக்கையையும் மன உறுதியையும் ஏற்படுத்தி, அவர்கள் கிராமிய நிறுவனங்களின் நடவடிக்கைகளில் பூரண பங்கெடுத்து அவற்றுடன் ஏற்கனவே உள்ள தொடர்பினை மேலும் வலுப்படுத்தி நிரந்தரமானதொன்றாக்கிக் கொள்ள இச்சஞ்சிகை உதவும்,

அச்சிட்டு வெளியிடுவோர் :
கமநல ஆராய்ச்சி
பயிற்சி நிறுவகம்
114, விஜேராம மாவத்தை,
கொழும்பு–7.

# சனசக்தி மூலம் வளர்ச்சிக்கான உறுதிப்பாடு

மக்களின் வாழ்க்கைத் தரத்தை நன் முயற்சிகளினுல் சிறப்படையச் செய்தல் அவசியமாகும். இதனை அடிப்படை நோக்க மாகக் கொண்டே அண்மைக்கால இலங்கை யின் வரலாற்றில் பொருளாதாரத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அரச நிதியிலும் பாரிய தொகை இத்தகைய நல்வாழ்வுப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருப்பதனுல் அத்திட்டங்கள் மேலும் வலிவடையும். காலப்போக்கில் மக்கள் தொகை பெருகி வருவதனுல் தேசிய செல்வத்தில் பெரும் பகுதி அவர்களது நல்வாழ்வுக்காகவே ஒதுக்கப்படுகிறது. நாட்டின் விடுதலைக்குப் பின்னர் ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் அதன் பொருளாதார வளர்ச்சி வீதம் 2-3 சதவீதமாகவே இருந்து வந்துள்ளது. வளர்ச்சி வீதம் குன்றி இருந்தமையால், நல்வாழ்வுத் திட்டங்களுக்குத் தேவையான செலவினத்தைப் பொருளாதாரம் தாங்கிக் கொள்ள முடியாதிருந்தது. மக்களின் அடிப் படைத் தேவைகளான உணவு, வேலை வாய்ப்பு போன்றவற்றை வழங்க நலிந்த பொருளாதாரம் இடமளிக்காததினுல், 1960 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசு எவ்வளவு முயன்றும் முன்னர் நடைமுறையி லிருந்த நல்வாழ்வுத் திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்ற இயலாது போயிற்று. இதன் காரணமாக நாட்டின் வறுமைப்பாடு படிப்படியாகப் பெருகியது.

இந்நிலையை விரைவில் மாற்றுதற்கான திட்டத்தை 1977 இல் ஆட்சிக்கு வந்த அரசு வகுத்தது. இதன்படி திறந்த பொரு ளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்து அதன் மூலம் துரித வளர்ச்சி காண நாடு தயார்படுத்தப்பட்டது. இத்தகைய துரித வளர்ச்சியினுல் தோன்றக் கூடிய செழுமை எல்லா மட்டத்தினருக்கும் தெரியும் என்றே புதிய திட்டத்தை வகுத்தோர் எதிர் பார்த்தனர். இப்புதிய பொருளாதாரத் திட்டத்தினுல் வேலை வாய்ப்பும், ஊதியமும் பெருகும் போது நாட்டின் வறுமைநிலை படிப்படியாக மறைந்துவிடும் என நம்பி னர். ஆயினும், இவ்வாறு தோற்றுவிக்கப் பட்ட செல்வம் ஒவ்வாதவற்றுக்குச் செல விடப்பட்டதனுலும், விரயமாகியதனுலும், பணமும் செல்வாக்கும் படைத்த ஒரு சிறு கும்பலுக்குள் ஓரளவு சிக்கிக் கொண்டதனுலும், பிரிவினைவாதிகளிட மிருந்து நாட்டைக் காப்பாற்றும் பணி களுக்குச் செலவிட வேண்டியிருந்ததனுலும், கீழ் மட்டத்து மக்களுக்கும் செல்வம் சம

கலாநிதி ரஞ்சித் டீ வணிகரத்ன
தலைவர்,
விவசாய, திட்டமிடல் மதிப்பீட்டுப் பிரிவு.

மாகச் செறிய வேண்டும் என்ற நோக்கு ஈடேறவில்லை. கீழ் மட்டத்து மக்களின் வறுமை நிலை மேலும் மோசமாகியுள்ளது. இப்பின்னணியை வைத்துப்பார்க்கையில், கீழ் மட்டத்து மக்களின் வறுமை நிலையைப் போக்கக்கூடிய சனசக்தி திட்டம் இது வரையில் இருந்த பொருளாதார, நலன் புரித் திட்டங்களுக்குப் புறம்பானதொரு ஏற்பாடு எனக் கொள்ளலாம்.

## சனசக்தி ஏற்பாடு

ஏலவே குறிப்பிட்டதைப் போன்று, சனசக்தி அபிவிருத்தி ஏற்பாடு நிலையான பொருளாதார அடித்தளத்தை ஆதார மாகக் கொண்டிருப்பதுடன், முன்னைய அபிவிருத்தி ஏற்பாடுகளிலும் பார்க்கப் பெரி தும் வேறுபட்டதுமாகும். முதலாவதாக, சமுதாயத்தில் மிகக்குறைந்த வருமானம் பெறும் வறிய குடும்பங்களில் நிலவும் போஷாக்கின்மையை அவசிய உணவுத்



திட்டத்தின் மூலம் போக்குதல். இரண்டாவதாக சனசக்தி ஏற்பாட்டின் மூலம் குடும்பங்கள், கிராமங்கள், மற்றும் கிராமத்து அமைப்புக்கள் போன்றவற்றில் அடங்கிக் கிடக்கும் அறிவுத்திறன்கள், திறமைகள், நவீன உத்திகள் ஆகியவற்றை தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தல். மூன்றாவதாக, குடும்ப மட்டம் தொடக்கம் தேசிய மட்டம் வரையுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கும் அவற்றை விரிவுபடுத்துவதற்குள்ள இடுக்கண்களைப் போக்குதற்கும் உப திட்டங்களை வகுத்தல். சனசக்தியை ஒரு மிக்கப் பயன்படுத்தக்கூடிய பலநோக்குத் திட்டங்களை வகுத்தல் நான்காவது அம்சமாகும். இதன்படி, கமத்தொழில், கைத்தொழிற் துறைகளிலும், குடும்பங்கள், கிராமங்கள், மாவட்டங்கள், மாகாணங்கள் ஆகியவற்றை ஒருமித்த வகையில் அபிவிருத்தி செய்தலும், அதன்மூலம் பரந்த அளவிலும் முன்விருந்தவாறும் அபிவிருத்தி அமைப்பை நாட்டில் உருவாக்குதலும் சனசக்தித் திட்டத்தின் இலட்சியமாகும். ஐந்தாவதாக, நாட்டின் பொருளாதார வளத்தைப் பலப்படுத்துவது மட்டுமல்லாது நாட்டின் சமூக கலாச்சார கல்வி நிலையையும் மேலும் விருத்தி செய்தல் சனசக்தியின் மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

## சனசக்தியின் பொருளாதார அபிவிருத்தி விரிவாக்கம்

இத்தகைய பொருளாதார அபிவிருத்தி விரிவாக்க இயல்பினால் பல விடயங்கள் தொடர்புபடுகின்றன. சனசக்தி பொருளாதாரத் திட்டம் கிராம மட்டத்திலும், கிராமிய குடும்ப மட்டத்திலும் ஆரம்பமாகும்போது அவற்றுக்குள்ள தேவைகள், முதன்மைகள், முடிவுகள் ஆகியவற்றையும் கருத்திற்கொள்ளவேண்டி வருகின்றன.

இவ்வகையில் நாடு முழுவதும் வேலை வாய்ப்பையும் ஊதியத்தையும் பெருக்கும் செலவீடுகள் பெருகுகின்றன.

இப்படியான செயற்திட்டங்களினால் சகல மட்டத்து மக்களும் பங்கு கொள்வதுடன், அவை தோற்றுவிக்கும் செல்வமும் இப்போதிலும் பார்க்கப் பகிர்ந்தளிக்கப்பட வாய்ப்பு ஏற்படும்.

## சனசக்தியின் பொருளாதார வளர்ச்சி தீவிரமாதல்

அரசு எதிர்பார்க்கும் வேகத்தில் பொருளாதார வளர்ச்சி தீவிரமடையச் செய்தற்கு வேண்டிய அடிப்படை உதவி களைப் பல வழிகளில் தோற்றுவிக்கும்.

உணவுத் திட்டத்தின் மூலம் இப்போது வறுமை நிலையில் வாழும் மக்கள் குழாத்திற்குக் கிடைக்கும் உணவுப் பொருட்களின் அளவைக் கூட்டுதலினுல் வலுவளித்தல். மாதம் ஒன்றுக்கு 1,458 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் குறைந்தது ஐந்து பேர்களைக் கொண்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் கிடைக்கச் செய்தல். இதன் மூலம் முன்னர் இருந்த உணவு முத்திரை ஏற்பாட்டிலும் பார்க்க மூன்று அல்லது நான்கு மடங்கு கூடுதலாக வறுமைப்பாட்டில் உள்ள மக்களுக்கு உணவு வழங்கி வலுவூட்ட உத்தேசிக்கப்படுகிறது. வறுமைப்பட்ட குடும்பத்திற்குக் கிடைக்கும் மற்றும் சிறு சிறு வருமானங்களைக் கொண்டும், சனசக்தி ஏற்பாட்டின் கீழ் கிடைக்கும் உணவுப் பொருட்களை வாங்கிக் கொண்டு, மிச்சப்படும் பணத்தைக் கொண்டும், தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தற்கான பண்டங்களையும், சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம். இதனுல் அத்தகைய பண்டங்கள் சேவைகளுக்குள்ள கிராக்கி அல்லது தேவைப்பாடு பெருகும்.

சனசக்தி ஏற்பாட்டின் கீழ் தெரிவு செய்யப்படும் ஏழ்மைக் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் அவர்களுடைய பெயரிலேயே 1048 ரூபா மாதாந்தம் சேமிப்பு வங்கிகளில் சேர்க்கப்படும். இவ் வகையில் இத்தகைய குடும்பங்களுக்கு இரண்டு ஆண்டுகளில் குறைந்தது 25,000 ரூபா முதலாகச் சேர்ந்து விடும். இத்துடன் உணவுக்காகக் கிடைக்கும் 1,458 இல் மிகுதிப்படும் தொகையும் தங்கள் உழைப்பினுல் கிடைக்கும் ஊதிய மிகுதியும் சேர்த்துக் கொள்ளப்பட வாய்ப்பிருக்கும். இவ்வகையில் வறுமை நிலையில் உள்ள ஒரு குடும்பத்துக்கு அவசியப்படும் ஆக்கச் செலவுக்ும் மூலதனம் திரண்டு விடும்.

இப்படியான சேமிப்பின்கீழ் தற்போது இந்நாட்டிலுள்ள 14 இலட்சத்து 42 ஆயிரம் ஏழைக் குடும்பங்களும் 3,600 கோடி ரூபாவை 2 வருடத்தினுள் மூலதனமாகத் திரட்டக் கூடியதாக இருக்கும். இவ்வளவையும் ஆக்கத் தேவைகளுக்குச் செலவிடுவதன் மூலம் வேலை வாய்ப்பையும் ஊதியத்தையும் குறுகிய காலத்தினுள் தோற்றுவிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வளவு தொகை முதலை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தற்கான திட்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அத்தகைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளையும் எதிர்பார்ப்புக்களையும் கண்டாக வேண்டும்.

குடும்ப மட்டத்திலும், கிராம மட்டத்திலும் மிக வறிய மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய கமத்தொழில், கைத்தொழில் செயற்பாடுகளைக் கண்டறிதல் வேண்டும்.

உள்ளூரில் கிடைக்கக்கூடிய வளங்களையும் பல மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய தன்மையையும் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், அதிக செலவினத்தைக் கொண்டிராததாகவும் அத்தகைய தொழில்கள் அமைந்திருத்தல் விரும்பத்தக்கது. அத்துடன், அவை சூழலை மாசுபடுத்தாத, இயற்கை வளங்களைப் பாதுகாக்கக் கூடிய நீண்டகால திட்டத்தைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

இத்தகைய தொழில்களை வழிகாட்டி நடத்தவும், ஒத்துழைப்பு வழங்கவும் கிராமிய, பிராந்திய மட்டத்தில் பணிபுரியும்,

அரச ஊழியர்களும், அரச சார்பற்ற நிறுவன ஊழியர்களும் முன்வருவர். கிராம மட்டத்தில் இவற்றை ஆரம்பிப்பதனால் மனித வளத்தைப் பயன்படுத்தி சிறு கைத்தொழில்களைப் பெருக்குவதுடன், கமத்தொழிலால் கிடைக்கும் உப பொருட்களை மூலப்பொருளாகக் கொள்ளும் கைத்தொழில்களையும் நீண்ட கால அடிப்படையில் நிறுவ சனசக்தித் திட்டம் வழிவகுக்கும்.

பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தல், வேலைவாய்ப்பு, வருமானம் ஆகியவற்றைப் பெருக்குதலுடன் சனசக்தித் திட்டம் நிறைவேற்றப்படும். ஆரம்ப நிலையில் வறிய குடும்பங்கள் உணவுப் பற்றாக் குறையினால் பாதிக்கப்படாதிருப்பது பற்றியும் விசேட கவனஞ் செலுத்தப்படும். இந்நிலையை ஏற்படுத்தற்கு அவசியமான கமத்தொழில் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. போசாக்குப் பதார்த்தங்கள் அடங்கிய விலை குறைவான விளைபொருட்களை ஊக்குவிக்கவும் திட்டங்கள் உள்ளன.


உற்பத்தியைப் பெருக்கி, உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகத்தை இணைத்து வளர்க்கவும் சனசக்தியின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றின் மூலம் துரித அடிப்படையில் உற்பத்தியைப் பெருக்கவும், பண்டங்களைச் சந்தைப்படுத்தவும், பண்டங்களின் தரத்தை உயர்த்தவும் உத்தேசிக்கப்படுகிறது. இவற்றுக்கு சனசக்தியின் உதவி கிடைத்தலுடன், கஷ்ட நிலையில் உள்ள உற்பத்தியாளர்களுக்குப் போதிய ஆதாயம் கிடைக்கவும் வழியமைக்கப்படும்.

இவற்றின் நோக்கம் குடும்ப மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை வளமான வாழ்வுக்கு வழிவகுப்பதேயாகும். இதன்படி, இதுவரை கால அபிவிருத்தித் திட்டங்களில் உட்படுத்தப்படாத வறிய மக்களது அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்து, அவர்களது சக்தியையும் திறனையும் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்துவது நோக்கமாகும்.

சனசக்தி மூலம் மக்களை ஊக்கப்படுத்துவதுடன் அபிவிருத்தியினால் கிடைக்கும் பயனைக் குறிப்பாக ஏழை மக்களிடையேயும், பொதுவாக ஏனைய மக்களிடையேயும் பகிர்ந்துகொள்ள முனையப்படுகிறது. மக்களுக்கு அவசியமானவை, அவர்களது தேவைப்பாடுகள், முடிவுகள் போன்றவற்றைக் கருதிற்கொண்டு, மனித சக்தி திறன் போன்ற வளங்களைக் கமத்தொழில், கைத்தொழில் போன்ற வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்த உத்தேசிக்கப்படுகிறது.

குடும்ப மட்டத்திலும், திறமை மட்டத்திலும் நிலவும் பாரம்பரிய சமூக பொருளாதார இலட்சணமாக விளங்கும் பரஸ்பர உதவி, மட்டான வளங்களை பரவலாகப் பகிர்ந்து கொள்ளுதல், கலந்து பேசி ஒத்துழைத்து எல்லோருக்கும் நன்மை தரும் முடிவுகளைப் பொதுப்படையாக எடுத்தல் போன்றவை சனசக்தித் திட்டத்தினால் தோன்றக்கூடிய நன்மைகள். நவீன சந்தைச் சூழல் நாடும் உற்பத்தி முறையைத் தோற்றுவித்து தனிப்பட்டவரது திறமையைப் பயன்படுத்தல், பொருளாதார ஆதாயத்தைப் பெருக்குதல், மேலதிக உற்பத்தி, துரித, பரவலான, நீடித்த பொருளாதார, சமூக அபிவிருத்தி ஆகியன மற்றைய நன்மைகளாகும்.

# இலங்கையின் வறுமை நிலை



இலங்கை சுதந்திரம் பெற்ற காலந் தொட்டு அதாவது 1948ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வந்த பொருளாதார வளர்ச்சித் திட்டங்களின் பலா பலன்களை கவனிக்கும்போது, மற்றைய வளர்முக நாடுகளிலும் பார்க்க எமது நாடு சுகாதார நிலையிலும், கல்வி நிலையிலும் இன்னும் முன்னணியில் இருக்கிறது. ஆனல், எமது வறுமை நிலை இன்னும் ஒழிந்ததாக இல்லை. மக்கள் தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் கடும் வறுமையில் உழல்கின்றனர். அவர்களது மாதாந்த வருமானம் முந்நூறு ருபாவுக்கு மேற்படவில்லை. இதன் காரணமாக, உணவு, குடியிருப்பு வசதி, குடிநீர் போன்ற அத்தியாவசிய தேவைகளைக்கூட நிறைவு செய்ய முடியாதிருக்கின்றனர். இதன் எதிர்விளைவே நாட்டில் நிலவும் வேலையின்மை, போஷாக்கின்மை, அமைதியின்மை, குழப்பநிலை போன்றவையாகும். நகர்ப்பகுதிகளையும், கிராமப்பகுதிகளையும் ஒப்புநோக்குகையில், கிராமப் பகுதிகளிலேயே அதிக வறுமைநிலை நிலவுவதாகக் காணப்பட்டுள்ளது. இதனல், கிராமிய வறுமையை ஒழிப்பதற்கே பொருளாதார வளர்ச்சித் திட்டங்களில் முன்னிடம் தரப்பட வேண்டும் என புதிய அரசு கருதுகிறது.

ஜீ. எம். ஹேனகெதர
(ஆராய்ச்சி பயிற்சி உத்தியோகத்தர்)

வளர்ச்சித் திட்டங்களால் ஏற்படும் பலாபலன்கள் உரியவாறு பரவலாகச் செறியாததாலும், செல்வ வளங்கள் குறைவாக இருப்பதாலும் நாட்டு மக்களில் பெரும்பாலோரைப் பட்டினியும் போஷாக்கின்மையும் வாட்டுகின்றன. அவசிய தேவைகளை வாங்கும் சக்தி குறைவதனல் அவர்களது வாழ்க்கைத் தரமும் குறைந்து

கொண்டு போகிறது. இவ்வாறு கிராமிய வறுமை உக்கிரமடைவதுடன் சமூக, பொருளாதார கருத்துக்களும் மாறக் கூடும். வறுமைநிலை பிரதேச, கிராமிய மட்டத்தில் போலவே நகர்ப்புறங்களிலும், பெருந்தோட்டப் பகுதிகளிலும் வெவ் வேறு நிலையில் நிலவி வந்தபோதிலும், நாடு முழுவதிலும் வறுமை ஒரே மாதிரி யாகவே ஒழிக்கப்பட வேண்டும்.

கண்ணுக்குப் புலப்படும் அம்சங்களைக் கொண்டும் புலப்படா அம்சங்களைக் கொண் டும் வறுமையைக் கணிக்க முடியும். மனித னுக்கு அவசியமான உணவு, குடியிருப்பு, தண்ணீர் ஆகியவற்றில் தனியொருவ னுக்கு எவ்வளவு கிட்டுகிறது என்பதைக் கொண்டு புலப்படா வகையிலும் சமூகத் தில் நிலவும் வருவாய் நிலை அதன் செலவு ஆகியவற்றைக் கொண்டு பிரத்தியட்ச முறையிலும் வறுமையை அளக்க முடி கிறது. இவற்றில் எந்த முறைப்படி அளந்து பார்த்தாலும், இலங்கையில் கிராமிய வறுமை உக்கிர நிலையை அடைந்திருப்ப தும், உலகின் மிக்க வறிய நாடுகளில் ஒன் றாக இலங்கை விளங்குவதும் கண்கூடு.

இலங்கையின் வறுமையைக் காட்டும் அளவுச் சுட்டுக்கள் பலவாகும். தனியொரு நபருக்குக் கிடைக்கும் வருவாய் வீதம், நிலம் துண்டாடப்படுதலும், நிலமின்மை யும், உடலுக்குக் கிட்டும் உணவுக்கலரி வீதக்குறைபாடு, சேவைப்பயன்பாடு, வரு வாய்ச் செறிவு, அரச துறையும், தனியார் துறையும் வழங்கும் சேவைகளைப் பயன் படுத்தற்குக் காட்டும் தயக்கம் ஆகியனவும் மேற்குறித்த சுட்டுக்களுள் சிலவாகும்.

கடந்த தசாப்தங்கள் பலவற்றில் இலங் கையில் தனிநபர் வருவாய் புள்ளி விபர ரீதியில் ஓரளவு ஏறியிருந்தபோதிலும், யதார்த்த நிலையில் அதன் முக்கியம் சோபிக்கவில்லை. 1982 இல் 320 அமெரிக்க டொலராக இருந்த தனிநபர் வருவாய் 1987 இல் 340 டொலராக ஏறியிருந்தது. இக்கால இடைவெளியில் கொழும்பில் நுகர்வாளர் விலைமட்டம் 416 புள்ளியிலி ருந்து 652 புள்ளியாக உயர்ந்து காணப் பட்டது. செல்வ நாடுகள் வாணிப ரீதியில் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் மனப் போக்கு, ஏற்றுமதிப் பொருட்களது விலை வீழ்ச்சி, அதிக வெளிநாட்டுக் கடன் பெறு தல், செலுத்து நிதி மீதப் பற்றுக்குறை, ரூபாவின் மதிப்பிறக்கம், பொருட்களின் விலை, சேவைக்கட்டண ஏற்றம் போன் றவை வறுமை வளர்ந்ததற்கு முக்கிய காரணங்களாகும். தனிநபர் வருவாய் 1969/70 தொடக்கம் 1980/81 காலவரை யுள்ள பகுதியில் உயர்ந்துள்ளபோதிலும், வறுமைக்கோட்டுக்குக்கீழ் உள்ளோரது வீதம் 18 சத வீதத்திலிருந்து 22.5 சதவீத மாக அதிகரித்திருந்தது. கிராமங்களிலோ இது மேலும் கூடுதலாக இருந்தது.

அட்டவணை 1

இலங்கையில் வறுமை நிலை சனத்தொகையின் நூற்றுவீதப்படி

| வருடம் | வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ளவர்களின் தனிப்பட்ட வருமானம் | வறுமைக்கோட்டுக்குக் கீழே சனத் தொகை % | கிராமிய துறையின் விகிதா சாரம் | வளங்கள் |
|---|---|---|---|---|
| 1969/70 | — | 18.0 | — | கொழும்புத் திட்ட அலுவலகம் ( 1979 ) |
| 1973 | 36.50 | 13.0 | 17.6 | மார்க்க நிறுவனம் ( 1982 ) |
| 1980/81 | 80.00 | 22.5 | 25.6 | சனத்தொகை புள்ளிவிபரத் திணைக்களம் |

வளம்: கிராமிய ஆசியாவில் வறுமையை அகற்றுவதற்கான நடவடிக்கைகள்; (1985) சர்வதேச தொழில்ஸ்தாபனம்

நிலம் துண்டாடப்படுதலும், நிலமின்மையும் மற்றொரு அத்தாட்சியாகும். இலங்கையின் மக்கள் தொகையில் 65 சதவீதமானோர் குறுநிலக் கமக்காரர்களாக இருப்பதுடன், தங்கள் உணவுக்காகவே பயிர் விளைவிக்கின்றனர். குத்தகைக் கமக்காரர், கமத்தொழிலாளர், வாரச்செய்கைக்காரர் என்றெல்லாம் வகைப்படுத்தப்படும் சிறு நிலக் கமக்காரர்களது உற்பத்தி வீதம் வெகு குறைவாகவே இருந்து வருகிறதென கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் அண்மையில் நடத்திய ஆய்வுகளிலிருந்து புலப்படுகிறது. தொகை மதிப்பீட்டு அறிக்கையின்படி சாதாரண கமக்காரன் ஒருவனுக்கு 1.96 ஏக்கர் நிலமே உடைமையாகவுள்ளது. மொத்த மக்கள் தொகையில் 78 சதவீதத்தினர் 3 ஏக்கருக்கும் குறைவான நிலத்தை உடைமையாகக் கொண்டிருப்பதுடன் 37.8 சதவீதத்தினர் தங்கள் விளைச்சலை தங்கள் சாப்பாட்டுக்காகவே பயன்படுத்துகின்றனர். மொத்த சனத்தொகையில் ஐந்தில் இரண்டு பங்கினர் ஓர் ஏக்கருக்குக் குறைவான நிலத்தையே உடைமையாகக் கொண்டிருப்பதுடன் சாதாரண நிலவுடைமை தலைக்கு 0.37 ஏக்கரேயாகும். மக்களில் 11 சதவீதத்தினர் எவ்வித நிலமும் அற்றவர்களாக உள்ளார்கள்.

**அட்டவணை 2**

**விவசாயக் காணிகளின் பரம்பல் 1980/81**

| விஸ்தீரணம் (ஏக்கர்) | விவசாயக் காணி% | பரப்பளவு% | சராசரி விஸ்தீரணம் |
|---|---|---|---|
| ½ | 30.2 | 2.4 | 0.18 |
| ½-1 | 15.2 | 4.0 | 0.16 |
| 1-2 | 19.3 | 10.4 | 1.26 |
| 2-3 | 11.4 | 11.0 | 2.26 |
| 3-10 | 21.0 | 43.0 | 9.96 |
| 10ற்கு மேல் | 2.9 | 29.2 | 23.46 |

வளம்: சனத்தொகை புள்ளிவிபரத் திணைக்களம்

இலங்கையில் மக்கள் உட்கொள்ளும் உணவு தலைக்கு எத்தனை கலோரிகளை அடக்கியதாக இருக்கும் என்பதைக் கருத்திற் கொண்டும் வறுமை ஒழிப்புக்கு ஏற்பாடு செய்யலாம். சர்வதேச வீதப்படி மனிதன் ஆரோக்கியமாக வாழ்வதற்கு அவசியமான ஆகக் குறைந்த கலோரிப் பிரமாணங்களை உட்கொள்ளாத பெருந்தொகையான மக்கள் இந்நாட்டில் வாழ்கிறார்கள் என 1980/81 இல் நடத்தப்பட்ட சமூக பொருளாதார ஆய்வு ஒன்று சுட்டிக்காட்டுகிறது. போதிய கலோரி நிறைந்த உணவும், புரதமும் உட்கொள்ளாமையினால் போசாக்குக் குறைவும், வியாதிகளும் ஏற்பட்டு சௌக்கிய நிலை பாதிக்கப்படும். இலங்கையில் மருத்துவ ஆய்வு ஒன்று தாய் - சேய் போஷாக்கு பெரிதும் குன்றியிருப்பதாகக் குறிப்பிடுகிறது. கிராமிய, நகர மக்களில் பெரும்பாலோரும் சத்துணவு போதியளவு உண்பதில்லை எனவும் தெரியவந்துள்ளது.

**அட்டவணை 3**

**இலங்கை சனத்தொகையினால் உட்கொள்ளப்படும் கலோரிகள், புரதங்களின் விகிதாசாரம்**

| | வருடம் | போதியளவு கலோரிகள், புரதங்களை பெறும் குடும்பங்களின் விகிதாசாரம் கலோரி | புரதம் |
|---|---|---|---|
| நகரத்துறை | 1969/70 | 36.3 | 45.5 |
| | 1980/81 | 50.0 | 35.3 |
| கிராமியத்துறை | 1969/70 | 31.7 | 44.5 |
| | 1980/81 | 43.0 | 38.1 |
| தோட்டத்துறை | 1969/70 | 19.7 | 19.5 |
| | 1980/81 | 39.0 | 28.3 |

வளம்: கிராமிய ஆசியாவில் வறுமையை அகற்றுவதற்கான நடவடிக்கைகள்- சர்வதேச தொழில் ஸ்தாபனம்; (1985) பக்கம் 246.

கைத்தொழில், கமத்தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள், சிறுநிலக் கமக்காரர்கள், குத்தகைக் கமக்காரர்கள், வாரக் கமக்காரர்கள், நிலமற்றவர்கள் ஆகியோரே இலங்கையில் முக்கியமாக வறுமையால் பாதிக்கப்படுகின்றனர். கமத்தொழிலில் ஈடுபடும் இத்தகையோர் முக்கியமாகக் கடன் பளுவினால் அவதிப்படுகின்றனர். அவர்களுக்குக் கமத்தொழிலில் கிடைக்கும் வருவாய் குறைவு. அத்துடன் நவீன உத்திகளைக் கடைப்பிடிக்கவும் ஆர்வம் காட்டுவதில்லை. ஏனெனில் அவர்கள் தாபன ரீதியான கமச் சேவைகளைப் பயன்படுத்தவும் முன்வருவதில்லை. கமக்காரர் அமைப்புகள் ஏற்பட்டு அவை சரிவரச் செயற்படாதமையும் இதற்குக் காரணம் எனக் காட்டப்பட்டுள்ளது. ஓர் ஏக்கருக்குக் குறைவான நிலம் உடையவர்கள் தாபன ரீதியான கடன் எடுப்பதில் ஆர்வம் காட்டுவதில்லையாம். மூன்று (3) ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தை உடையவர்கள் 1-3 ஏக்கர் நிலத்தை உடையவர்களிலும் பார்க்க ஊக்கம் காட்டுகிறார்கள். இதனால் புலப்படுவது என்னவெனில் சிறிய கமக்காரர்கள் பலர் தனிப்பட்டவர்களிடமிருந்து உயர் வட்டிக்குக் கடன் பெறுகிறார்கள் என்பதே. கடன் முதலுக்காகவும், கட்டுப்பணத்துக்குக் கருவிகள் வாங்குவதாலும் சிறிய கமக்காரர்கள் 200 சதவீதத்திற்கு மேற்பட்ட வட்டி செலுத்துகிறார்கள்.

### அட்டவணை 4
### விவசாய காணி சொத்துடைமையின் பிரகாரம் விவசாயத்துக்காக பெற்ற கடன்கள்

| காணியின் சொத்துடைமை (ஏக்கர்) | நிறுவகக் கடன்களை பெறும் நபர்களின் விகிதாசாரம் |
|---|---|
| 1 ஏக்கருக்கு குறைய | 0 |
| 1-3 வரை | 33 |
| 3 க்கு மேல் | 46 |

வளம்: ''இலங்கையில் வறுமையும், வருமான குறைபாடும்'' சர்வதேச தொழில் ஸ்தாபனம், 'ஆர்டெக்' நிறுவனம் (1984) பக்கம் 256

சேவைகள் நல்கும் உடல் உழைப்புத் துறையிலும் வேலையின்மையும், தக்க வேலையின்மையும் நிலவுவதால் வறுமை நிலை வளர்கிறது. புள்ளி விபரப்படி, மக்கள் தொகையில் 20 சதவீதத்தினர் வேலையற்றும், 30% தக்க வேலையற்றும் இருக்கின்றனர். பல கிராமங்களில் மக்கட் பெருக்கம் கூடுதலாக இருப்பதும், அதற்கேற்ப வேலைவாய்ப்பு இல்லாதிருப்பதும் வறுமை நிலை வளர்வதற்குக் காரணமாகவுள்ளது. வேலையின்மையால் இளைஞரிடையே அமைதியின்மையும், அதன் காரணமாக நாட்டில் சிக்கல்களும் ஏற்பட ஏதுவாகின்றன.

இலங்கையில் நிலவும் வறுமை நிலைக்குத் தெளிவான மற்றொரு எடுத்துக்காட்டு சமமற்ற வருமான விநியோகமாகும். வறுமை வளர்ந்துகொண்டு போவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம் என மத்திய வங்கி சுட்டிக் காட்டியுள்ளது. எழுபதாம் ஆண்டுகளில் நடந்த காணிச்சீர் திருத்த ஏற்பாட்டினால் தேசிய வருமானம் குன்றியும், 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் திறந்த பொருளாதார ஏற்பாட்டினால் தேசிய வருமானம் கூடியும் காணப்பட்டது. மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் அல்லது 20 சதவீதத்தினர் தேசிய வருமானத்தில் அரைவாசிக்கு மேல் வகிக்கின்றனர். ஆகக் குறைந்த வருமானம் பெறும் 20 சதவீதத்தினர் தேசிய வருமானத்தில் 5 சதவீதத்தையே அனுபவிக்கின்றனர்.

அட்டவணை 5

வருமானங்களுக்கு அமைய தேசிய வருமானத்தின் பகுப்பு

| வருமான பகுப்பு | | 1963 | 1973 | 1978/79 |
|---|---|---|---|---|
| ஆகக்குறைந்த குழு | 20% | 3.60 | 5.35 | 3.49 |
| 2 வது குழு | 20% | 8.75 | 11.60 | 8.60 |
| 3 வது குழு | 20% | 14.18 | 16.95 | 14.11 |
| 4 வது குழு | 20% | 22.08 | 23.29 | 20.82 |
| உயர் குழு | 20% | 51.39 | 42.27 | 52.98 |
| விகிதாசாரம் | | 0.44 | 0:37 | 0.48 |

வளம்: பாவனையாளர் நிதி மதிப்பாய்வு அறிக்கை-இலங்கை மத்திய வங்கி.

கடந்த நாற்பது ஆண்டுகளிலும் ஆட்சிக்கு வந்த வெவ்வேறு அரசுகள் பலவும் வறுமையை ஒழிப்பதற்குப் பல்வேறு உபாயங்களையும், திட்டங்களையும் மேற்கொண்டன. அரசு பொறுப்பேற்றுள்ள சமூக நல சேவைகள், பாரிய அளவில் கமத்தொழில் விரிவாக்கம், கமத்தொழில் தொடர்பான தாபன அமைப்பில் மாற்றஞ் செய்தமை, காணிச் சீர்திருத்தம், ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியன மக்களின் சேமநலனைக் கருத்திற்கொண்ட கொள்கைகளுள் சில எனக் கொள்ளலாம். இவை, வறுமையை ஒழிப்பதற்கு அடிப்படையானவையாக இல்லாவிட்டாலும், பொருளாதாரத்தை வளர்த்து அதன்மூலம் வறுமையைப் போக்குவதை நோக்காகக் கொண்டிருந்தன. அத்தகைய கொள்கைகளினால் விளைச்சல் அதிகரிப்பு, கிராமங்களில் வளர்ச்சி, சாணக்கியம், கல்வி போன்ற துறைகளில் முன்னேற்றம் முதலியன ஏற்பட்டன. சிறப்பாக உணவு முத்திரைச் சலுகை, சௌக்கிய கல்விச் சலுகைகள் போன்றவற்றால் வறிய மக்களில் பெரும்பாலோர் பட்டினி நிலையிலிருந்து காப்பாற்றப்பட்டனர். எனினும், 1977 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் கொள்கையால் மக்களுக்கு வழங்கிய சலுகைகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டதனால் வறுமைத் தொல்லை உக்கிரமடைந்தது. இது பற்றிக் கூறுவதாயின் இந்நாட்டில் வறுமை ஏற்படுவதற்கும், வளர்வதற்கும் காரணமாக இருந்தவற்றைச் சுருக்கமாகக் கூறவேண்டும்: அவை:

* வறுமையைப் போக்குதற்கான கொள்கைகள் அடிப்படையில் வறுமை ஒழிப்பை இலட்சியமாகக் கொண்டிருக்கவில்லை.

* சகல பொருளாதாரக் கொள்கைகளும் மேல்மட்டத்திலிருந்து கீழ் நோக்கி உருட்டிவிடப்பட்டனவே தவிர, அபிவிருத்திப் பலனை அனுபவிக்கும் வறிய மக்களது கருத்துக்கள் அறியப்படவில்லை.

* வளர்ச்சியும் பங்கீடும் என்ற திடசங்கற்பத்தைக் கொண்ட கொள்கை வகுக்கப்படவில்லை.

* 'அபிவிருத்தியில் பங்கேற்றல்' என்ற கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டபோதிலும், வறுமையில் வாடிய பிரிவினரது பங்கேற்புப் பெறப்படவில்லை.

* பல அபிவிருத்தித் திட்டங்கள் நகரப் பகுதிகளுக்கு நன்மை தரக்கூடிய வகையில் நிறைவேற்றப்பட்டமை.

* வாழ்க்கை நடத்த இயலாத மிக வறிய மக்களைத் தெளிவாகக் கண்டறியாத காரணத்தினுல், ஓரளவு வாழ்க்கை வசதி படைத்தவர்களுக்கு வறுமை ஒழிப்புச் சலுகைகள் போய்ச் சேர்ந்தன.

இதனுல் வறுமை ஒழிப்புப் பிரச்சினை பெரிதும் சிக்கலாகியிருப்பதுடன், அதைச் சார்ந்த பல புதுப் பிரச்சினைகளும் கிளைக்கத் தொடங்கியுள்ளன. போஷாக்கின்மை, வேலையின்மை, இளைஞர் நெருக்கடிகள், சமூக அமைதியின்மை போன்றவை வறுமை பெருகுவதனுல் ஏற்படும் கிளைப்பிரச்சினைகளாகும். இதனுல் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் யாவும் வறுமை ஒழிப்பைக் குறியாகக் கொண்டுள்ளன. அவை வறிய மக்களையும் பங்கு கொள்ளச் செய்வனவாக இருக்க வேண்டும். அத்துடன் வாழ்க்கை நடத்த வழியற்றவர்களுக்குக் கைகொடுத்து உதவுவனவாகவும் வறிய மக்கள் அரசை நம்பியிருக்கச் செய்யாது தேசிய உற்பத்தியைப் பெருக்கச் செய்ய வறிய மக்களுக்கும் வாய்ப்பளிப்பது சாலச் சிறந்த கொள்கையாகும். இதில் தன் முயற்சிக்கு முதலிடம் கிடைப்பதுடன், இது பற்றிய அறிவையும் பரப்புதல் மிக மிக அவசியமாகும்.

## ஆசிய நகரங்களில் வறுமை மேலும் பரவும்

ஆசிய பிராந்தியத்தில் குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. எனினும், அடுத்த 10 வருட காலத்தில் ஆசிய நகரங்களில் வறுமை மேலும் பரவும் என்றே எதிர்பார்க்கப்படுவதாக ஆசிய அபிவிருத்தி வங்கி அதன் வருடாந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

ஆசிய நாடுகளின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய 1988 இல் 320 கோடி டாலர்களைச் செலவு செய்துள்ள ஆசிய அபிவிருத்தி வங்கி பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவை மையமாகக் கொண்டு இயங்குவதாகும்.

அண்மையில் வெளியிடப்பட்ட அதன் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

சுமார் 60 கோடி ஆசியர்கள் படுமோசமான வறுமையில் வாடுவதாக கணிப்பிடப்பட்டுள்ளது. கூடுதலான அளவுக்கு நேரடியான அணுகு முறையைக் கடைப்பிடித்தால் இவ்வறுமைக் கொடுமையை கணிசமான அளவுக்கு தணிக்க முடியும்.

வறுமை ஒழிப்பை நோக்கிய முயற்சிகள் விசேடமான குழுக்களை இலக்காகக் கொண்டு செயற்படுத்தப்பட வேண்டும். வறுமை ஒழிப்புத் திட்டங்கள், நிலமற்றவர்கள், சிறிய விவசாயிகள், மீனவர்கள், நடைபாதை வியாபாரிகள் போன்ற வறிய மட்டத்தவர்களை அடையக் கூடியதாக இருக்க வேண்டும். கிராமப்புற வறுமையே முதன்மைக் கரிசனைக்குரியதெனினும், அபிவிருத்தியடைந்து வரும் ஆசிய நாடுகளின் நகரங்களில் அடுத்த 10 வருடங்களில் வறுமை பரவும்.

வரையறுக்கப்பட்ட தொழில் வாய்ப்புகள், சனத்தொகைப் பெருக்கத்தின் விரைவு, கிராமப் புறங்களில் வழங்கப்படும் அற்ப ஊதியம் ஆகியவையே வறுமை அதிகரிப்புக்கான முக்கிய காரணிகள்.

# கமத்துறைக்குப் புதிய நோக்கு வேண்டும்

ஓரளவு காலமாக நான் கமத்தொழில் அலுவல்களில் தொடர்புடையவன். எனினும் இன்னும் கமத்தொழில் பயில்பவனுக என்னைப் பற்றிக் கருதிக் கொள்கிறேன். அத்தொழிலைப் பற்றிய எல்லா அம்சங்களையும் ஒரு போதுமே அறிந்துகொள்ள இயலாது. முடிவுகளைச் செய்து, அவற்றை உறுதிப்படுத்திக் கொண்டு செயற்படுத்திப் பார்த்தல் எப்போதும் கடைப்பிடிக்கப் படும் செயலமைப்பாகும். அத்தகைய ஒரு சூழலை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும். இது எந்த மட்டத்தினருக்குச் சிறப்பாகப் பொருந்தும் எனச் சொல்லப் போவதில்லை.

இலங்கையில் கமத்தொழிற் துறைக்குச் சில வசதிகள் உள்ளன என்பதை ஏற்றுக் கொள்ளலாம். முதலில் எமக்குள்ள நிலத்தை முழுமையாகப் பயன்படுத்திப் போதியதாக்கிக் கொள்ள வேண்டும். என் கருத்து; உள்ள நிலம் போதாது என்பதல்ல. எமக்கு மிகையாக நிலம் இருந்தால் விரும்பத்தக்கதே. ஆயினும், அப்படி நிலம் எமக்குக் கிடையாது. எனவே, நிலத்தை நாம் பெரும் செல்வமாகவே கருத வேண்டும். ஆதலால் எந்த வகையில் தானும் நிலம் வீணுக்கப்பட்டால் அது நாட்டுக்குக் கெடுதலே. பயிர் விளைவிக்கக்கூடிய நிலத்தில் பயிர் விளைவியாது விடுதலும், அதில் ஆகக்கூடிய விளைச்சலைப் பெற முனையாதிருப்பதும் விரயம் எனவும், எங்களது தோல்வி எனவும் நாம் கொள்ள வேண்டும். இங்கு புள்ளி விபரங்களை நான் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. எமது நாட்டைப் பொறுத்த வரையில் மனிதன்-நிலம் இரண்டுக்கும் இடைப்பட்ட விகிதாசாரம் பயங்கரமாக வீழ்ச்சியடைந்து வருகிறது என்பதை மாத்திரம் சொன்னுல் போதுமானது.

கமத்தொழிலின் பல துறைகளிலும் நாம் நன்ருகவே செயற்பட்டிருக்கிறோம் என்பதைப் பிசகில்லாது தெளிவுபடுத்த வேண்டியிருப்பதைப் போலவே, இன்னும் எங்களுக்குச் சாத்தியமாகக் கூடியதில் சிறிதும் முன்னேறவில்லை என்பதையும் ஒப்புக் கொள்ள வேண்டும். இதுவரையில் வெற்றி கண்ட துறைகளை விட்டு, இயலக்கூடிய மற்றைய துறைகளையிட்டும் நாம் சிந்திக்க வேண்டும். இதுவரை செயற்பட்டதுடன் திருப்திப்பட்டு விடாது, இன்னும் திறம்படச் செயற்பட உத்வேகம் கொள்ள வேண்டும்.

**கௌரவ லலித் அத்துலத்முதலி**
**(விவசாய, உணவு, கூட்டுறவு அமைச்சர்)**

இந்நாட்டில் நாம் நெல் விளைச்சலைப் போற்றுகிறோம். ஆயினும், பொருளாதார ரீதியில் மாத்திரம் நோக்கும்போது, நெற்செய்கை இந்நாட்டில் மிக்க அனுகூலமான விதத்தில் நடைபெறுவதாகச் சொல்லமுடி

யாது. நெற்செய்கையிலும் பார்க்க வேறு பயிர்களைப் பயிரிட்டால் மக்கள் அதிக ஆதாயத்தைப் பெறலாம். இந்நாட்டில் நெற்செய்கைக்கு ஏனைய நாடுகளிலும் பார்க்க அதிக செலவு ஏற்படுகிறது. நிலத்திலிருந்து பொருளாதார ரீதியில் ஆகக் கூடுதலான பயனைப் பெறுவதற்கு நெற்செய்கை உகந்ததல்ல. இருந்த போதிலும், நெற்செய்கை பொருளாதார நோக்கற்ற வேறு வகைகளில் முக்கியமாக உள்ளது. இவற்றுள் பிரதானமானது பாதுகாப்பாகும். அரிசி எங்களது முக்கிய உணவுப் பொருளாக இருப்பதால் அரிசியில் தன்னிறைவு காண வேண்டும் என்ற கோஷம் எழுப்பப்படலாம். யுத்தம் போன்ற ஏதேனும் இடுக்கண் ஏற்பட்டால் எமது நாட்டிலேயே எமது உணவைத் தேடிக்கொள்ளலாம் என்ற காரணத்தாலேயே, இப்போதிலும் பார்க்க அதிக செலவு ஏற்பட்டாலும் நெற்செய்கையை மேற்கொண்டு வருகிறோம். எவரேனும் இந்து சமுத்திரத்தில் பெரும் தடையை ஏற்படுத்தி விட்டால் எங்கள் நெல் இல்லாவிட்டால், பட்டினியால் பரிதவிக்க வேண்டியதுதான். மறைந்த பிரதமர் டி. எஸ். சேனநாயக்க அவர்கள் நெற்செய்கைக்கு முக்கியத்துவம் அளித்த கொள்கையை நியாயமானதே எனக் கருதுவதற்கு மேற்குறித்த பொருளாதாரத்திற்கு புறம்பான காரணங்களும் உள. எனவே நெல்லுக்குள்ள இராஜ மரியாதையோ, உன்னத பீடமோ குறைந்து விடப்போவதில்லை. எப்படியாயினும், அதிக விளைச்சலை ஏற்படுத்தற்கு நாம் சில விடயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

நிலத்துக்கும் மனிதனுக்கும் இடைப்பட்ட விகிதாசாரத்தைப் பொறுத்த வரையில் ஓர் உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும். கமத்தொழிலுக்கு ஏற்ற நிலப் பரப்பில் அதிக மக்களைக் குடியேற்றுவதிலும் பார்க்க அவற்றிலிருந்து அவர்களை இடம் பெயரச் செய்யும் நிலையே கமத்தொழில் அமைப்பில் உருவாகியுள்ளது. கமத்தொழிலில் ஈடுபடாதவர்கள் அப்பகுதிகளிலிருந்து விலகி வேறு தொழில்களை மேற்கொள்ள வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்குத் தேவையான உணவுப்பொருட்களைக் கமக்காரர்கள் உற்பத்தி செய்து கொடுக்கலாம். இத்தகைய ஏற்பாடுகள் ஒரேயடியாக அல்லது படிப்படியாக நடக்க வேண்டியவைகள். மக்களைக் குடியேற்றக் கூடிய அளவுக்கு இன்று நிலம் கிடையாது. கைத்தொழிற் துறையில் ஒருவனுக்குத் தொழில் வாய்ப்பு ஏற்படுத்துவதிலும் பார்க்க பாசன வசதி கொண்ட நிலத்தில் ஒருவனைக் குடியேற்றுவதற்கு அதிக செலவு ஏற்படுகிறது என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். 1986 உலகவங்கி புள்ளி விபர அறிக்கையின்படி, பாசன வசதியுள்ள நிலத்தில் ஒரு நபரைக் குடியேற்ற பத்தாயிரம் டொலர் செலவாகிறதாகவும், கைத்தொழிற் துறையில் ஒரு நபருக்கு வேலை வாய்ப்பளிக்க மூவாயிரம் டொலர் மாத்திரமே செலவாகிறதாகவும் அறிய வருகிறோம்.

கமத்தொழிற் துறையில் இப்போது கிடைக்கும் பலாபலனையிட்டு நாம் அதிகம் திருப்திப்பட முடியாது. இதனைக் குறிப்பிடுவதன் மூலம், நிலத்தில் ஆகக் கூடிய விளைச்சலைப் பெறுதலைக் குறியாகக் கொள்ள வேண்டும் என்பதையே காட்டுகிறேன். சாதாரண மக்களிடம் போய் அவர்களுக்குள்ள பிரச்சினையைப் பற்றிக் கேட்டால் 'நிலமில்லை, நீர் இல்லை' என்று சொல்வார்கள். அப்படித்தான் அவர்களில் நாலைந்து குடும்பங்களுக்கு ஏதேனும் ஒரு கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் நிலம் வழங்கினாலும், அவர்கள் மீண்டும் வறுமையிலேயே உழல்வார்கள். இதற்கு நல்ல உதாரணம் தேசீய கிராம ஒருங்கிணைப்புக் குடியேற்றத் திட்டத்தின் நிலையாகும். எனக்குக் கிடைத்துள்ள தகவலின்படி தக்க பலாபலன் கிடைக்காத நிலத்தில் ஐயாயிரத்து ஐநூறு பேர் வரையில் குடியேற்றப்பட்டுள்ளார்கள். நல்ல நோக்குடன்தான் அவர்கள் குடியேற்றப்பட்டார்கள். ஆனால் அவர்கள் வறுமை நிலையில் தான் இருக்கிறார்கள். காரணம் தண்ணீர் வசதி இல்லாமையே. ஆகவே, ஏதாவது பாரிய பாசனத்திட்டம் ஒன்று ஏற்படும் வரை இப்பிரச்சினை இருக்கவே செய்யும். கடந்த பத்தாண்டுகளிலும் பாசனத் திட்டங்

கள் பல நிறைவேறியிருப்பது உண்டு. ஆயினும் தண்ணீர் கிடைக்காததினால் சும்மா இருக்கிறோம் என்று சொல்லிவிட முடியுமா? அப்படியான மனப்பான்மையைக் கொள்ள முடியாது. எனவே எங்களுக்குள்ள தண்ணீர் வசதிக்கேற்றவாறு எங்கள் கமத்தொழிற் துறையில் மாற்றம் கொண்டு வர வேண்டும். இதற்கு நாம் இதுவரை நோக்காத கோணத்திலிருந்து நோக்கும் மனப்பான்மையைக் கொள்ள வேண்டும்.

ஐக்கிய நாடுகள் நிபுணர்களும், நம் நாட்டு நிபுணர்களும் அடிக்கடி குறிப்பிடும் ஒரு பிரச்சினையையிட்டு நாம் கவனிக்க வேண்டியுள்ளது. அதுவே சந்தைப்படுத்தலாகும். இது பற்றிய பல கருத்தரங்குகள் கூட நடைபெறுகின்றன. கம உற்பத்தி, சந்தைப்படுத்தற் பிரச்சினைகளுக்குத் தரப்படும் தீர்வு விற்க முடியாதிருக்கும் பயிர்களை விளைவிக்காதீர் என்பதாகும். விளைவிக்கத் தொடங்க முன்னர் விற்பனை நிலைமையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது எனது யோசனை.

எமது பயிர் வகைகளுள் பல குறுகிய காலத்தில் விளைவிக்கக் கூடியவை என்பதால் எங்களுக்குக் கிடைக்கும் 'ஓடர்களுக்கு' ஏற்ப விளைவிக்கலாம். இவ்வாறு சந்தைப்படுத்தலை உறுதிப்படுத்திக்கொண்டு விளைவிக்கத் தொடங்கினால் சிக்கல் ஏற்படாது. உதாரணத்துக்கு எனக்கு ஏற்பட்ட அனுபவம் ஒன்றைச் சொல்லுகிறேன். வர்த்தக அமைச்சராக இருந்தபோது அரிசி - றப்பர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட நான் சீனாவுக்குப் போயிருந்தேன். அப்போது எங்களுக்கு மிளகாய்த் தட்டுப்பாடு இருந்ததால், அங்கு மிளகாய் பெற முடியுமா என விசாரித்தேன். அதற்குச் சீனா சொன்ன பதில் ''மன்னிக்கவும். அப்படியானால் மூன்று மாதங்களுக்கு முன்னர் ஓடர் தரவேண்டும்'' என்பதே. கிடைக்கும் ஓடருக்கு ஏற்பவே மிளகாய் செய்கையும் இருக்கும் என்றார்கள். இத்தகைய ஒரு மனப்பான்மையை நாமும் காலப்போக்கில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

அடிக்கடி எழுப்பப்படும் மற்றொரு பிரச்சினைதான் கிராமியக் கடன் பற்றியதாகும். இப்பிரச்சினைக்கு உண்மையில் நாம்



ஒரு தீர்வு காண வேண்டும். இதற்கான அடிப்படையை ஆராய வேண்டும். ஒருவனிடம் கைவசம் பணம் இல்லை. அவன் ஏதேனும் உற்பத்தி செய்வதானால் அவனுக்குப் பணம் கிடைக்கச் செய்ய வேண்டும். ஏதேனும் காரணத்தினால் அவ்வாறு அவனுக்குப் பணம் கிடைக்காவிட்டால் அவனால் உற்பத்தி செய்ய இயலாது. கடன் கொடுத்த பின் என்ன நடக்கும்? அவன் பயிர் செய்வான். எனினும் தக்க பலன் கிடைக்காது போகிறது. அந்தப் போகம் அவனுக்குச் சிறப்பாக அமையாது போகலாம். ஆயினும் நாம் அவனைக் கொடுத்த கடனைத் திருப்பிச் செலுத்துமாறு வற்புறுத்துகிறோம். பயிர்ச்செய்கையால் பலன் கிடைக்குமா என்ற அக்கறை அவனுக்குத் தான் ஏற்படுகிறது. கடன் கொடுத்தவர்களுக்கு அப்படி அக்கறை ஏற்படுவதில்லை. கடன் கொடுத்தவர்களும் அத்தகைய அக்கறையைப் பகிர்ந்து கொண்டால் நல்லாக இருக்குமல்லவா? பயிர்ச்செய்கைக்குக் கொடுத்த கடனை வேறு எதற்காவது பயன்படுத்தினால் அது வேறு பிரச்சினை. அப்படியான சந்தர்ப்பத்தில் ஏதாவது நடவடிக்கை எடுத்தால் பரவாயில்லை. கடனை எடுத்துப் பயிர் செய்து, விளைச்சல் கிடைக்கும்போது மழை பெய்து அழிந்து போனால், அவன் கடனை, எப்படிப் பிரித்துக் கொடுப்பது என்பதையிட்டு நாமும் சிந்தித்தால் நல்லதல்லவா?

இந்நாட்டில் கிராமிய மட்டத்தில் கடன் வழங்குவதற்கு நல்ல தாபன அமைப்பு உள்ளது. கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தைக் குறிப்பிடலாம். இதனை அநேகர் பாராட்டாவிட்டாலும், அது உதாரணமான ஒரு அமைப்பாகும். அதனால் அதன் அனுபவத்தையும் பயனையும் நாம் பயன்படுத்த வேண்டும். கிராமிய கடன் பிரச்சினைகள்தான் எங்கும் எழுப்பப்படுகின்றன. அவற்றுக்கான தீர்வுகளைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

எங்களுக்குள்ள சிறந்த வாய்ப்பைப் பற்றியும் நாம் உணர வேண்டும். மூன்றாவது உலகிலேயே சாதாரண கல்வி அறிவில் முன் நிலையில் இருக்கும் மக்களைக் கொண்டது எங்கள் நாடு. உகந்த துறைகளில் அறிவூட்டி அவர்களைச் செம்மையாக இயங்க வைக்கலாம். எதனைச் செய்து காட்டினாலும் அதனை அவர்கள் நன்கு கிரகித்து நன்கு செய்யக் கூடியவர்கள். ஏற்றுமதி உற்பத்திக் கிராமங்களைத் தொடக்கி வைத்தோம். அவர்கள் அங்கு வெற்றிகரமாகச் செயற்பட்டு வருகிறார்கள். அங்கு கடன் பிரச்சினையே எழவில்லை.

எமது கமத்தொழில் பற்றிய மற்றொரு விடயத்தையும் குறிப்பிட வேண்டும். பயிர்ச் செய்கை நிலம் பெரும்பாலும் சிறு பரப்பளவுகளில் உள்ளன. மக்கள் தொகையில் 70 சதவீதத்தினர் இரண்டு ஏக்கருக்கும் குறைவான நிலத்தையே சொந்தமாகக் கொண்டுள்ளனர். அவர்களுள்ளும் 40 சதவீதத்தினர் ஓர் ஏக்கருக்கும் குறைவான நிலத்தை உடையவர்கள். இது மற்ற நாடுகளுக்கில்லாத, எங்களுக்கே உள்ள ஒரு பிரச்சினை. தாய்லாந்து நாட்டில் இப்படிப் பிரச்சினை இருக்காது; ஒரு வேளை தாய்வான் நாட்டில் இருக்கலாம். சிறிய காணிகளுக்கு ஏற்ற உற்பத்தித் திட்டங்களை வகுத்துக் கொள்வோம். அவற்றின் மூலம் ஆகக் கூடுதலான விளைச்சலைப் பெற முயலுவோம். காணிகளை ஒருங்கிணைத்தல், காலத்துக்கேற்ப காணிச் சீர்திருத்தத்தை மேற்கொள்ளுதல் போன்ற விடயங்களும் கவனிக்கப்படவுள்ளன.

ஊடு பயிர்ச் செய்கைக்கும் நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். பயறு, சோளம், கௌபி அல்லது கடலை போன்றவற்றை ஊடு பயிராக விளைவிக்கலாம். அவற்றுக்கு உத்தரவாத விலை வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

சனசக்தி ஏற்பாட்டின் மூலம் சந்தைப்படுத்தல் பிரச்சினை சுலபமாகலாம். பயறு, சோளம், கௌபி போன்ற தானியங்களைப் பற்றி எமது கமக்காரர்களுக்கு ஒருவித முன்னறிவித்தல் கொடுத்தல் வேண்டும். அத்துடன் அவற்றுக்கு ஓரளவு விலை கொடுத்து அவற்றை வாங்கவும் ஏற்பாடு செய்தல் வேண்டும். சனசக்தி ஏற்பாடு காரணமாக நிதிப் பிரச்சினை ஏற்படாது. கம உற்பத்திக்குச் சனசக்தித் திட்டத்தின் கீழ் கிடைக்கும் நிதியைக் கொண்டு சந்தைப்படுத்தி ஆகக் கூடுதலான நன்மையைப் பெறுதல் வேண்டும்.

# சனசக்தி

## வறுமையில் வாடும் குடும்பத்திற்கு ஒரு வரப்பிரசாதம்

ஒரு நாட்டின் முக்கிய வளங்களுள் மக்கள் வளம் ஒன்ருகக் கணிக்கப்படுகிறது. அந்நாட்டின் வளத்தை மேம்படுத்த மக்கள் வளத்தை சரியான முறையில் பயன்படுத்தல் அவசியமாகும். இந்த வகையில் உருவாக்கப்படும் திட்டமே சனசக்தித் திட்டமாகும். தனியாள், குடும்பம், குழு, சமூகம் ஆகியவற்றின் சுய சக்தியை அடிப்படையாகக் கொண்ட முழுமையான அபிவிருத்தியைக் கட்டி எழுப்புதலே சனசக்தித் திட்டத்தின் பொருளாகும்.

கடந்த காலங்களில் மக்கள் வளத்தைப் பயன்படுத்தி அவர்களின் வாழ்வை வளம்படுத்துவதுடன், நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது. இவ்வாருன நடவடிக்கைகள் நாட்டின் எல்லாப் பகுதியிலும் உள்ள சகல தர மக்களையும் திருப்திப்படுத்துவதாகவோ, அல்லது பயன்படுத்துவதாகவோ அமையவில்லை. சனத்தொகைப் பெருக்கம் காரணமாக வேலையில்லாப் பிரச்சினை, வறுமை, போஷணைக்குறைவு, வதிவிட வசதியின்மை ஆகிய பிரச்சினைகளும் உருவாகின.

இலங்கையில் 75 லட்சம் மக்கள் வருமானம் குறைந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆவர். இத்தொகையினருள் 33 லட்சம் மக்கள் வறியவர்களினுள் வறியவர்களாக விளங்குகின்றனர்.

ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 37.5 சதவீதத்தினர் போஷாக்குக் குறைபாட்டினுல் பாதிக்கப்படுகின்றனர். 13 சதவீதத்தினர் அதி போஷாக்குக் குறைபாட்டினுல் பாதிக்கப்படுகின்றனர். இந்தத் தோற்றப்பாடு குறிப்பாக சேரிகளிலும், கிராமங்களிலும் அதிகம் காணப்படுகிறது. இதற்கு வறுமை நிலை பிரதான காரணமாகவுள்ளது. இந்நிலை மேலும் சமூகத்திடையே வளர்ச்சியடைந்து சமூகத்திற்கு பாதிப்பு ஏற்படாது தடுக்க பொருத்தமான அணுகுமுறையாக சனசக்தித் திட்



டத்தை தற்போதைய அரசாங்கம் முன் வைத்துள்ளது.

## சனசக்தித் திட்டம் யாருக்கு ?

மாதமொன்றுக்கு 700 ரூபாவுக்கு குறைவான வருவாயைப் பெறும் ஆரோக்கியமான தனியாள், அல்லது குடும்பத்தினர் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப் படுவர். ஆண், பெண், இன, மத, மொழி வேறுபாடின்றி தகுதியுடைய யாவரும் படிப்படியாக இத்திட்டத்திற்குட்படுத்தப் படுவர். தற்போது உணவு முத்திரையைப் பெறுபவர்களும், இதுவரை உணவு முத்திரையைப் பெருமல், ஆனல், இத்திட்டத்திற்கு தகுதி உடையவர்களும், இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

## எவ்வாறு அமுல் செய்யப்படுகிறது?

இத்திட்டத்தை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, மாவட்ட அரசாங்க அமைச்சர் மூலமும், மாவட்ட மட்டத்தில் உதவி அரசாங்க அதிபர் மூலமும், கிராம மட்டத்தில், கிராம சேவகர்கள் உதவிக்குழுக்கள் மூலமும் செயற்படுத்தும். உதவிக்குழுவில் ஒரு பெண் உட்பட நால்வர் அங்கம் வகிப்பர். இலங்கையில் 30,000 குக்கிராமங்கள் உள்ளன. ஒவ்வொரு கிராமத்திற்கும், மக்களால் தெரிவு செய்யப்பட்ட இந்த உதவிக்குழு ஆக்கபூர்வமான செயன்முறையில் ஈடுபடும்.

## யார் தெரிவு செய்வது?

வறுமை நிலையில் உள்ளவர்களை அந்தக் கிராமத்தவர்களே இனங்கண்டு இத்திட்டத்தில் சேர்ப்பதற்கு உதவுவர். சனசக்தித்திட்ட நடவடிக்கைகள் எல்லாம் பகிரங்கமான முறையில் அமுல் செய்யப் படுவதால் பாகுபாடு காட்டப்பட சந்தர்ப்பம் ஏற்படமாட்டாது.

## எப்படிப்பட்டவர்கள்?

அத்தியாவசியப் பொருட்கள் இல்லாதவர்களும் அல்லது பற்ருக்குறையுள்ளவர்களும், அத்துடன் சம்பந்தப்பட்ட சுகாதாரம், கல்வி, சூழல் சுத்தக்குறைவு என்பவற்ருல் பாதிக்கப்பட்டு திருப்திகரமான வாழ்க்கைத்தரத்தை கொண்டிராதவர்களாக காணப்படுபவர்களும் வறுமையானவர்கள் என கணிக்கப்படுவர்.

## சனசக்தித்திட்டக் குடும்பங்களுக்கு நிறைவேற்ற வேண்டிய அடிப்படைத் தேவைகள்:

1. தனது பொருளாதாரத்தை அபிவிருத்திச் செய்யக்கூடிய ஒரு தொழிலைப் புரிவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
2. சமூக பாதுகாப்புத் திட்டங்களைப் பற்றியும், அவற்றின் நன்மைகளை பற்றியும் மக்களுக்கு விளக்குவதுடன், அவற்றை கிடைக்கச் செய்ய உதவுதல்.
3. மந்தபோஷணையை நீக்குவதற்குரிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.
4. அடிப்படை சுகாதார வசதிகளைப் பயன்படுத்துவதற்கும், பேணுவதற்கும் பயிற்சியளித்தல்.
5. எழுத்தறிவை வளர்க்கும் பொருட்டு பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்புதல்.
6. முதிர்ச்சியடைந்தவர்களுக்கு முறைசாராக்கல்வி மூலம் தொழிற் பயிற்சி அளித்தல்.
7. வீட்டை சுகாதார முறைப்படி வைத்திருத்தல்.

8. சேமிப்புப்பழக்கத்தை விருத்தி செய்தல்.

6. சமூகத்திற்கு ஒவ்வாத மது அருந்துதல் போன்ற செயற்பாடுகளில் இருந்து விலகிக்கொள்ள பயிற்சி அளித்தல்.

இவற்றுடன் இத் திட்டம் ஏழைகள் அல்லது வசதி குறைந்தவர்கள் தமது திறமையை வெளிக்காட்டுவதற்கும், பயனுள்ள ஆக்க முயற்சியில் ஈடுபடுவதற்கும் வழிவகுத்தல்.

## சனசக்தித் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

இத்திட்டம் நான்கு முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது.

* வறிய குடும்பம் (700 ரூபாவிலும் குறைந்த வருவாயைக் கொண்டவர்கள்.)
* விதித்துரைத்த 24 மாத கால வரையறை.
* வளமூலங்கள் (நுகர்வுக் கூறு; மாதமொன்றுக்கு 1,458/- ரூபா, முதலீட்டுக் கூறு; மாதமொன்றுக்கு 1,042/- ரூபா மொத்தம் மாதமொன்றுக்கு 2500/- ரூபா)
* ஆதாரச் சேவைகள்.

நாளாந்த நுகர்ச்சிக்காக வழங்கப்படும் 1,458 ரூபாயில் 1,000 ரூபாவிற்கான கூப்பனும், 458 ரூபாவிற்கான ஒரு கூப்பனுமாக வழங்கப்படும். 1,000 ரூபாவிற்குத் தேவையான உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசிய பொருள்களையும் கொள்வனவு செய்ய முடியும். மிகுதி 458 ரூபாவை சேமிப்பில் இட்டுத் தேவையான போது பயன்படுத்த முடியும் அல்லது தன் உடன் தேவைகளுக்குப் பயன்படுத்தலாம்.

மூலதனத்திற்காக வழங்கப்படும் 1,042 ரூபாவும் தேசிய சேமிப்பு வங்கியில் சேமிக்கப்படும். கணவன், மனைவியாயின் இருவரினதும் பெயரிலேயே கணக்கு ஆரம்பிக்கப்படும். இப்பணம் 24 மாத முடிவில் ஒரு தொழில் முயற்சியில் ஈடுபட்டு தன் வாழ்க்கையை நடத்துவதற்குப் பயன்படும்.

## சனசக்தி அபிவிருத்தி

தனி ஆள், குடும்பம் குழு, சமூகம் ஆகியவற்றின் சொந்த சக்தியை அடிப்படையாகக் கொண்ட முழுமையான அபிவிருத்தியைக் கட்டி எழுப்புதல் எனப் பொருள்படும். சனசக்தி அபிவிருத்தியில் அடங்குபவை:-

1. மக்கள் அறிவையும், சிந்திக்கும் ஆற்றலையும் விருத்தி செய்தல்.
2. பிரச்சினைகளைத் தர்க்க ரீதியாக ஆராய்ந்து அவற்றிற்கான தீர்வுகளை மேற் கொள்ளுதல், சுதந்திரமான முடிவுகளை எடுத்தல், அவற்றை திறம்பட நிறைவேற்றும் ஆற்றலை வளர்த்தல்.
3. தனிநபர்களின் முகாமைத்துவ ஆற்றலை விருத்தி செய்தல்.
4. கூட்டுச்சேர்வதன் மூலம் கூட்டான திறமைகளை வளர்ப்பதுடன், கூட்டுப் பொறுப்பையும் வளர்த்தல்.
5. ஒருவர் மற்றவரில் தங்கியிருத்தலைக் குறைத்தல்.
6. சமுதாய தலைமைத்துவத்தை வளர்த்தல்.
7. சமுதாய வளங்களை சமுதாய முன்னேற்றங்களுக்காக பயன்படுத்தும் சக்தியை பெறுதல்.

8. ஒரு பிரச்சினைக்குரிய உரிமைகளைப் பற்றி அறிதலும், அவற்றைப் பெற்றுக் கொள்ளுதலும்.

9. சமுதாயத்திற்குக் கிடைக்கும் செல்வங்களைச் சமுதாய முன்னேற்றத்திற்கு பயன்படுத்துதல்.

10. சமுதாயத்தில் பெண்களின் பங்களிப்பையும், அவர்களின் முன்னேற்றத்தையும் விருத்தி செய்தல்.

11. சமூக பொருளாதார விருத்தியை கூட்டுதல்.

12. மனித உரிமைகளைப் பாதுகாத்தல்.

13. ஒவ்வொரு ஆள் அல்லது குடும்பங்களின் திறமை, தகுதி, சக்தி ஆகியவற்றைக் கண்டுபிடித்து அவற்றை முன்னேற்றுவதற்காக சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளுதல்.

14. தனியாட்களின் ஆளுமையை விருத்தி செய்தல்.

15. தனிநபர்களின் சுயகௌரவத்தை விருத்தி செய்தல் பேணுதல்.

## உதவிச் சேவைகள்

இத்திட்டம் அதிக வரவேற்பைப் பெற்றுள்ளது. அரச நிறுவனத்தினரும், தனியார் நிறுவனத்தினரும், தனிநபர்களும் ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். அமைச்சுக்கள், திணைக்களங்கள் ஆகியன சகலவும் ஒன்றோடு ஒன்று இணைந்து தொழிற்பட்டு அபிவிருத்தியெய்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## திட்டத்தின் பின்னணி

கடந்த காலங்களில் பல மாதிரிக் கிராமங்களில் வறுமையால் வாடிய மக்கள் எவ்வாறு தமது பொருளாதாரத்தையும், பிரதேசத்தையும் வளர்த்துள்ளார்கள் என ஆய்வுகள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டன. இவற்றின் முடிவுகள் உற்சாகமூட்டுவனவாக அமைந்திருந்தன. இத் திட்டம் இவ்வாறு பெறப்பட்ட அனுபவத்தின் பின்னணியில் ஆரம்பிப்பதால் வெற்றியளிக்கும் என்பதில் ஐயமில்லை. எனினும், இத் திட்டத்திற்காக உழைப்பவர்கள் கடமை உணர்வுள்ளவர்களாக, நேர்மையானவர்களாக, நடுநிலைமை வகிப்பவர்களாக இருந்தால் மட்டுமே பயனுள்ளதாகவும் அமையும்.

## முடிவுரை

வறுமையால் வாடும் குடும்பம் அல்லது தனி நபர்களுக்கு இத்திட்டம் ஒரு வரப்பிரசாதமாக உள்ளது. மக்கள் முன்னேற்றத்தை அப்பகுதி மக்களே திட்டமிடுவதால் அர்த்தமுள்ள திட்டமாக அமையும். சமூகத்திற்குப் பொருத்தமான நற்பண்புகளையும், மனப்பாங்குகளையும் விருத்தி செய்ய உதவும். வறியவர்களுக்கும் சமூகத்தில் அங்கீகாரம் கிடைக்கின்றது. இத்திட்டம் வருவாய் குறைந்த சகலருக்கும் பொருத்தமானதெனினும் விதவைகளும், தனியான பெண்களும் அதிகம் பயனடைவர். சனசக்தித் திட்டம் வெற்றியளிப்பதற்கு சகல தரப்பினரதும் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும்.

சனசக்தி திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டவுடனேயே அவர்களுக்குப் பொருத்தமான தொழில் வழிகாட்டலும், பயிற்சியும் அளிக்கப்படுதல் அவசியம்.

உலக நாடுகளுக்கே முன்மாதிரியாக விளங்கும் இத் திட்டம் காலப்போக்கில் விருத்தியடைந்து உலக நாடுகளில் பரவி அந்த நாடுகளில் வறுமையை ஒழித்துவிட உதவும் என்பதில் ஐயமில்லை.

**க. செல்வக்குமாரன்**
உள்ளக ஆலோசகர் (விவசாயம்)
கல்வித் திணைக்களம்
யாழ்ப்பாணம்

## கமச்செய்கையில் கிடைக்கும்

# கழிவுப் பொருட்கள்

## தகுந்தவாறு பயன்படுத்தினுல் நன்மை

இலங்கையின் பொருளாரத்தில் கமத் தொழில் முக்கிய இடத்தை வகிக்கிறது. இத்தொழில், இந்நாட்டு வருவாயில் இரு பத்தைந்து சதவீதத்தை ஈட்டிக்கொடுப்ப தற்கும், மக்களின் தொழில் வாய்ப்பில் ஐம்பது சதவீதத்தை வழங்குதற்கும் கார ணமாகவுள்ளது. இவற்றை ஆதாரமாக வைத்துக் கமத்தொழில் மக்களுக்கு எவ் வளவு இன்றியமையாதது என்பதைக் காண லாம். மக்கட் தொகையில் எண்பது சத வீதத்தினர் கிராமப்புறங்களில் வாழ்வ தால் அவர்களில் பெரும்பாலோருக்கு ஜீவ ஞேபாயமாக விளங்குவது கமத்தொழிலே யாகும். இதனுல் அதன் முக்கியத்துவம் மேலும் உயர்கிறது.

பெருகி வரும் மக்கள் தொகை காரண மாக கமத்தொழிலுக்கு மூலாதாரமாக வுள்ள விளைநிலம் அருகிவருகிறது. இதன் தாக்கத்திஞல் அதிகமாஞேர் கிராமப் பகுதிகளிலிருந்து நகர்ப்புறங்களை நோக்கி வேலை தேடி இடம்பெயர்ந்து வருகின்றனர். இத்தகைய நிலைமை ஏற்படுவதனுல் கிரா மப் பகுதிகளில் வாழும் இளைஞர்களது எண் ணிக்கை குறைவதுடன், நகர்ப்புறங்களில் வேலையற்று விரக்தி நிலையில் உள்ளோரது எண்ணிக்கை கூடியும் வருகிறது.

இத்தகைய நிலைமையைத் தவிர்ப்பதா ஞல் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புக் களைத் தோற்றுவிக்க வேண்டும். முன்னர் குறிப்பிட்டதைப் போல நிலப்பற்றுக்குறை ஏற்படுதலினுல், உற்பத்தி குறைவது மட்டு மல்லாது, பல பேரைக் கமத்தொழிலில் ஈடுபடுத்தவும் இயலாது போகிறது. இப் படிப்பட்ட வேளைகளில் புதிய உத்திகளைக் கடைப்பிடித்து உற்பத்தியைப் பெருக்கு வது ஓர் உபாயமாகும். நாம் போதியளவு அக்கறை காட்டாத மற்ருெரு உபாயம் ஒன்றும் உள்ளது. பயிர்க் கழிவுகளை பயன் படுத்தி கமத்தொழிலைச் செம்மையாகச் செய்தல் அம்முறையாகும். கிராமங்களில் அதிகமாகக் காணப்படும் பயிர்க் கழிவுகளுள் சில: வைக்கோல், வாழைத்தண்டு, உமி, சாணம், கோழி எச்சம், சருகு, குழை கொப்புகள் ஆகியனவாகும். இத்தகைய வீணுகப் போகும் பொருட்களைப் பயன்


**கலாநிதி பிரெட்ரிக் அபேரத்ன**
**தலைவர்**
*விவசாய வள முகாமைத்துவப் பிரிவு*


படுத்துவதன் மூலம் அவற்றை ஆதாயம் தரும் உயர்தர பொருளாக மாற்று வதுடன் இவற்றினுல் புதிய தொழில்களும், வேலைவாய்ப்புகளும் கூடத் தோன்ற முடி கிறது.

எனினும், இப்படிப்பட்ட சிறிய கைத் தொழில்களைத் தொடங்கும்போது இரண்டு விடயங்களைக் கவனிக்க வேண்டும். உத்தேச கைத்தொழிலுக்கு அவசியமான முதலும், உத்தேச உற்பத்திப் பொருளைச் சந்தைப் படுத்தற்கான வாய்ப்பும் இருக்கிறதா என் பதைக் கவனிக்க வேண்டும். முதலாவது அம்சமான நிதிப் பிரச்சினைக்கு சனசக்தித் திட்டம் பெரிதும் துணைநிற்கும். குறிப்பாக சனசக்தித் திட்டத்தில் பங்குகொள்பவர்

கள், கூட்டுறவு அடிப்படையில் ஒன்று சேர்ந்து, தங்கள் சேமிப்புக்களைக் கொண்டு நிதியைத் திரட்டலாம். அடுத்ததாக, பரந்த சத்தைப்படுத்தல் வாய்ப்பினைக் கண்டு பிடித்து உதவுதல் அரசின் பங்காகும்.

இப்போது பொருளாதாரப் பெறுமதியுடைய பயிர்க் கழிவுகளைப் பற்றிக் கவனிப்போம். நெல் விளைச்சல் மூலம் கிடைக்கும் கழிவுப்பொருட்களுள் ஒன்று வைக்கோல் ஆகும். அது கடதாசி செய்தற்குப் பயன்படுகிறது என்பதை அறிவோம். ஆயினும், வைக்கோல் முழுவதையும் இப்படியான பொருளாதார ரீதியான தொழில்களுக்குப் பயன்படுத்தும் வாய்ப்பு இன்னும் தென்படவில்லை. வயல்களுக்கு அண்மையில் வைக்கோல் குவியல்கள் தீயிடப்படுதல் நாம் அடிக்கடி காணும் காட்சியாகும். ஆனால் வைக்கோலை எத்தனையோ ஆக்க வழிகளில் பயன்படுத்தலாம். குறிப்பாக மண் அரித்துப் போகும் நிலங்களில் வைக்கோலைக் கொண்டு மூடி மண் அரிப்பைத் தடுக்கலாம். வயலை உழும்போது வைக்கோலையும் கலந்து உழுதால் மண் வளம்பெறும். வேலை வாய்ப்பு இல்லாதவர்களுள் சிலர் ஒருங்கு சேர்ந்து, வைக்கோலைப் பலரிடமிருந்து திரட்டி ஏற்றி இறக்குதலை ஒரு தொழிலாக மேற்கொள்ளலாம். இப்போது கூட சில டிரக்ரர் சொந்தக்காரர்கள் வைக்கோல் ஏற்றியிறக்கும் தொழிலைச் செய்கின்றனர்.

வாழை மடல், தண்டு ஆகியனவும் லாபகரமான தொழில்களை மேற்கொள்வதற்கேற்ற பொருட்களாகும். வாழை மடல் பலம் வாய்ந்த நாரினைக் கொண்டது. இதன் நாரைக்கொண்டு கயிறு, மற்றும் பல நார்ப்பொருட்களை உற்பத்தி செய்யலாம். சில காலத்துக்கு முன்னர் கேகாலை மாவட்டத்தில் றம்புக்கணைப் பிரதேசத்தில் இத்தொழில் நடைபெற்றுவந்தபோதிலும், போதிய சந்தை வாய்ப்பு இல்லாததினால் அத்தொழில் அதிகம் வெற்றியடையவில்லை. அதனால் இத்தகைய சிறு கைத்தொழில் உற்பத்திக்கு அரசும், ஏனைய துணை நிறுவனங்களும் சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தால், இதன் மூலம் வேலை வாய்ப்பைத் தோற்றுவிக்கலாம்.

உலகச் சந்தையில் நாளாந்தம் பெற்றோல், டீசல் எண்ணெய் போன்றவற்றின் விலை ஏறி வருகிறது. அதேபோல இரசாயன உரங்களின் விலையும் ஏறி வருகிறது. இதனால் கமத்தொழிலிற்கு ஏற்படும் செலவும் அதிகரித்து வருகிறது. ஆகவே இரசாயன உரங்களுக்குப் பதிலாக வேறு வகையான உரங்களை உதாரணமாக சேதன, அசேதன உரங்களை முடிந்த வரையில் பாவிக்க முயல வேண்டும். சேதன உர வகையினுள் பிரதானமானது கூட்டுரமாகும். கமத்தொழிலில் அன்றாடம் கிடைக்கும் கழிவுகளைக் கொண்டு கூட்டுரம் தயாரிக்கலாம். இவற்றுடன், இலைதழை, சிறிய குச்சிகள், சாண வகைகளையும் சேர்த்துக் கொள்ளலாம். இவற்றைத் தேடிச் சேர்த்தல் சிரமமாயினும், அவற்றுக்கு ஒரு சந்தை மானம் இருந்தால் அவற்றை வைத்து இலாபகரமான உற்பத்தியைத் தொடக்கலாம் என்பதில் ஐயமில்லை. வீட்டுத் தோட்டம் செய்வோருக்கும், பூந்தோட்டஞ் செய்வோருக்கும் கூட்டுறவுத் தேவை எப்போதும் இருக்கும். எனவே கூட்டுறவு உற்பத்தியை சிறு குழுவினர் ஒரு தொழிலாகக் கொண்டு ஆதாயம் தேடலாம்.

சந்தை வாய்ப்பு எனும்போது, உள் நாட்டுச் சந்தையைப் பற்றி மட்டுமல்லாது வெளிநாட்டுச் சந்தை பற்றியும் சிந்தித்தல் வேண்டும். இலங்கையில் இலகுவாகச் செய்யும் கமச்செய்கைகள் பல வெளிநாடுகளிலும் நடக்கின்றன. எனவே குறித்த சில கம உற்பத்திகளை ஆரம்பிக்கு முன்னர் வெளிநாடுகளில் அத்தகைய உற்பத்திகளுக்கு ஏற்ற சந்தை வசதி கிடைக்குமா என்பதை ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும். பப்பாளி மரச் செய்கையின் போது, அதன் உப உற்பத்தியான பப்பாளிப் பால் அல்லது 'பப்பெயினை' யிட்டு சிந்திக்கலாம். இலங்கையின் பழ வர்க்கங்கள் வெள்ளரி வர்க்கங்களுக்கும் வெளிநாடுகளில் கிராக்கி நிலவுகிறது. இப்படிப்பட்ட கமச்செய்கைகளை இலாபகரமாகச் செய்ய முடிந்தால், சுலபமாக வேலை வாய்ப்புக்களைத் தோற்றுவிக்கலாம்.

ஆகமொத்தத்தில் கமத்தொழில் மூலம் கிடைக்கும் உப பொருட்களையும், கழிவுப் பொருட்களையும் ஆக்க பூர்வமாகப் பயன்படுத்த முடிந்தாலும் முனைந்தாலும் ஆதாய பூர்வமான தொழில்களையும் வேலை வாய்ப்புக்களையும் தோற்றுவிக்கலாம்.

# சந்தையின் அபிவிருத்தி பொருளாதார மேம்பாட்டுக்கு வழி

காலாதிகாலம் தொட்டு சந்தை ('பொல') எமது மக்களின் நாளாந்த வாழ்க்கையில் ஒரு மிக முக்கிய இடத்தை வகித்துள்ளது. கடந்த வருடங்களில் விசேடமாக பெரும்பான்மையான கிராம மக்களின் நடவடிக்கையில் ஒரு இடமாகவன்றி ஒரு நிறுவனமாக சந்தை விளங்குகின்றது. கிராமிய சந்தைப்படுத்தல் முறை முழுவதும் சந்தையையே சுற்றியுள்ளது. இதே வேளை, சந்தையின் மேம்பாட்டுடன் கிராமியப் பொருளாதாரம் அபிவிருத்தி அடைந்துள்ளது. புத்தளம் பகுதியில் உள்ள ரொனிகல கல்வெட்டானது கிறிஸ்துவுக்குப் பின் 4 வது நூற்றுண்டில் நடைமுறையில் இருந்த 'கல்முனகே' எனப் பெயரிடப் பட்டிருந்த சந்தைப்படுத்தல் நிலையம் பற்றி குறிப்பிடுகின்றது. பதுளை கல்வெட்டானது கி. பி. 10 வது நூற்றுண்டில் மஹியங்களை பகுதியில் இருந்த 'ஹெப்பிட்கம' சந்தைப் படுத்தல் நிலையம் குறித்து குறிப்பிடுகின்றது. மேற்படி கல்வெட்டுக்களில் இந்த சந்தைப்படுத்தல் நிலையங்களை உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் விற்பனை செய்யும் இடமாகவும், மக்களின் நாளாந்த தேவைகள் பூர்த்தி செய்யும் இடமாகவும் வருணிக்கப்படுகின்றது. கிராமிய மக்களின் வாழ்க்கையில் இந்த சந்தை நன்ருக வேரூன்றியுள்ளது. இது அவர்களின் நாளாந்த வாழ்க்கையின் ஒவ்வொரு பொருளாதார நடவடிக்கையையும் தழுவியுள்ளது.

சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக கிராமிய மக்களுக்கு ஒரு முக்கிய தகவல் தொடர்பு நிலையமாகவும் சந்தை விளங்குகின்றது. சந்தையில் வைத்தே இவர்கள் தமது பிரச்சினைகள், அனுபவங்கள் ஆகியன குறித்தும், அரசியல் விவகாரங்கள் குறித்தும் கருத்துப் பரிமாறுகின்றனர். கிராம வாசிகள் தமது வீடுகளுக்குச் சென்று இப்புதிய செய்திகளை தமது குடும்பத்தவர்களுடனும், அயலவர்களுடனும் பரிமாறுவார்கள். எனவே, கிராமிய தகவல் தொடர்பு முறையில் சந்தை ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. வழமையாக சந்தை வாரத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஒரு நாளில் குறிப்பிட்ட இடமொன்றில் நடைபெறுகிறது. இச் சந்தைக்கு வாரமொருமுறை வருகை தருவது கிராமிய மக்களுக்கு ஒரு அத்தியாவசிய கடமையாக விளங்குகிறது. ஒருவர் இச்சந்தையில் பொருள்களை வாங்குகிருரோ அல்லது விற்கிருரோ அவர் சந்தைக்கு வருகை தருவது ஒரு இயற்கையான நிகழ்ச்சியாக அமைகின்றது. அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வொன்றில் இந்த சித்தாந்தம் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இவ்வாய்வில் பொதுவாக கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மத்தியதொரு நிலையமாக கிராமிய சந்தை இனங்காணப்பட்டுள்ளது.

பண்டார ரத்னுயக்க
(ஆராய்ச்சி பயிற்சி உத்தியோகத்தர்)

சமீபத்திய வருடங்களில் சந்தை நகரப்புறங்களுக்கு பரவி விட்டது. நகரக் குடியிருப்பாளர்களின் மத்தியில் கூட சந்தைக்கு வாரமொன்றுக்கு ஒரு முறை செல்வது ஒரு பழக்க வழக்கமாகி விட்டது. சந்தையில் பொருட்கள் மலிவான விலையில் கிடைக்கக் கூடும் என்றும், சிறந்த பொருட்களை வாங்கலாம் என்றும் இவர்கள் நம்புகின்றனர்.

கிடைக்கப்பெறும் தகவல்களின் பிரகாரம் நாடு பூராவும் 400க்கு மேற்பட்ட சந்தைகள் உள்ளன. அவை பற்றிய விபரம் வருமாறு:-

1987 ல் மொத்த எண்ணிக்கையான கிராமிய சந்தைகள்

| மாவட்டம் | கிராமிய சந்தைகளின் எண்ணிக்கை | உள்ளூராட்சி சபைகளினால் நடத்தப்படும் சந்தைகளின் எண்ணிக்கை | கேள்விமூலம் உள்ளூராட்சி அரசாங்க சபைகளினால் தனியார் துறையினருக்கு வழங்கப்பட்ட சந்தைகளின் எண்ணிக்கை | தனிப்பட்டவர்களுக்கு சொந்தமாகவுள்ள சந்தைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| அம்பாறை | 11 | 02 | 09 | — |
| அனுராதபுரம் | 19 | 05 | 11 | 03 |
| பதுளை | 10 | 05 | 05 | — |
| மட்டக்களப்பு | 04 | 04 | — | — |
| காலி | 21 | 01 | 15 | — |
| கம்பஹா | 42 | 31 | 05 | — |
| ஹம்பாந்தோட்ட | 25 | — | 23 | 02 |
| களுத்துறை | 26 | 05 | 18 | 03 |
| கண்டி | 10 | 02 | 08 | — |
| குருநாகல் | 61 | 15 | 36 | 10 |
| மாத்தளை | 10 | 08 | — | 02 |
| கேகாலை | 16 | 08 | 07 | 01 |
| மன்னார் | 01 | — | 01 | — |
| மாத்தறை | 21 | — | 20 | 01 |
| மொனறாகலை | 23 | 23 | — | — |
| முல்லைத்தீவு | — | — | — | — |
| நுவரெலியா | 03 | — | 03 | — |
| பொலன்னறுவை | 11 | 05 | 04 | 02 |
| புத்தளம் | 30 | — | 18 | 12 |
| இரத்தினபுரி | 35 | 07 | 26 | 02 |
| திருகோணமலை | 02 | — | 02 | — |
| வவுனியா | 10 | — | 10 | — |
| கொழும்பு | 15 | 01 | 08 | 06 |
| மொத்தம் | 406 | 122 | 229 | 55 |

வளம்: உள்ளூராட்சித் திணைக்களம்

(யாழ். மாவட்டத்தில் 1980ல் 51 வாராந்த சந்தைகள் இருந்ததாக அறிவிக்கப்படுகிறது.)

இந்த அட்டவணையின் பிரகாரம் பெரும்பாலான சந்தைகள் குருகாகல் (61), கம்பஹா (42), இரத்தினபுரி (35), புத்தளம் (30), களுத்துறை (26), ஹம்பாந்தோட்டை (25) போன்ற பாரிய விவசாய மாவட்டங்களிலேயே அமைந்துள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது. இம் மாவட்டங்களில் உள்ள பெரும்பாலான மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளதனுல் அவர்களுக்குச் சந்தைப்படுத்தலுக்கான ஒரு மத்திய இடமாக விளங்குகின்றது. எனவே சந்தையானது குறைந்த வருமானமுள்ள மக்களின் வாழ்க்கையில் உயர்வான முடிவுகளை ஈட்டிக்கொடுக்க முடிவதுடன், கிராமிய பொருளாதாரத்தில் மேம்பாட்டு நிலையைத் தோற்றுவிக்க முடிகின்றது.

கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் கிராமிய வாராந்த சந்தைகள் (பொல) குறித்து குருநாகல் மாவட்டத்தில் 1980 இலும் களுத்துறை மாவட்டத்தில் 1988 இலும் நடத்திய ஆய்வுகளில் இச்சந்தைகளுக்குக் கிடைக்கும் வசதிகள் மிகவும் குறைவு என்று சுட்டிக்காட்டியுள்ளதுடன், இவற்றை மேம்படுத்துவதற்கான அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளது.

இச்சந்தைகளில் இருந்து வரிகள், அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் என்ற ரீதியில் கணிசமான அளவு வருமானங்கள் பெறப்பட்ட போதும் வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு ஓரளவு அல்லது அறவே கவனம் எடுக்கப்படுகின்றது. அடிப்படை வசதிகளான நீர், மலசலகூடங்கள், மின்சாரம், போதியளவு இடம், வடிகால், பாதுகாப்பு ஆகியன பெரும்பாலான இச்சந்தைகளில் குறைவாகக் காணப்படுகின்றன. சந்தைகளில் செய்யப்பட வேண்டிய அடிப்படை வசதிகளுக்குப் புறம்பாக ஏனைய வெளிவாரி வசதிகளான ஏற்றி இறக்கல், களஞ்சியப்படுத்தல், தகவல் தொடர்பு, வங்கிகள், சிற்றுண்டிச்சாலைகள் ஆகியவற்றை மேம்படுத்த வேண்டியுள்ளது. நாட்டின் மொத்தச்சந்தைகளில் 86 சதவீதத்தில் அரசாங்கத் துறையானது நேரடி அல்லது நேரடியற்ற கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கிறது என்பதை மேற்படி அட்டவணை எடுத்துக்காட்டுகிறது.

இவ்வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பட்சத்தில் சந்தைகள் வர்த்தகர்களையும், பாவனையாளர்களையும் கவர்வதுடன் மட்டுமன்றி, கிராமிய துறைகளிடையே குறிப்பிடத்தக்க வேலைவாய்ப்பையும் பெற்றுக் கொடுக்கும். இலங்கை மத்திய வங்கி 1981 - 82ல் நடத்திய நிதி, சமூக, பொருளாதார மதிப்வாய்வின் அறிக்கையின் பிரகாரம் கிராமியப் பகுதியில் வாழும் 72 சதவீத மக்கள் விவசாயத்திலேயே தங்கியுள்ளனர்.

இது பற்றிய அட்டவணை வருமாறு:-

**வருமான மட்டங்களுக்கு இணங்க பகுக்கப்பட்ட விவசாயிகள்**

| வருமான குழுக்கள் (ரூபா) | நகர்த்துறை | கிராமியத்துறை | தோட்டத்துறை | நாடுபூராவும் |
|---|---|---|---|---|
| 0-700 | 1.6 | 40.7 | 22.3 | 64.6 |
| 701-1000 | 0.5 | 12.4 | 1.7 | 14.6 |
| 1000-1500 | 0.5 | 8.9 | 0.6 | 10.0 |
| 1501-2000 | 0.1 | 3.4 | 0.1 | 3.6 |
| 2001-2500 | 0.1 | 1.0 | 0.1 | 2.1 |
| 2500 | 0.1 | 4.7 | 0.1 | 5.1 |
| | 3.1 | 72.0 | 24.9 | 100.0 |

(இலங்கை மத்திய வங்கியின் நிதி, சமூக பொருளாதார மதிப்பாய்வு தரவில் இருந்து கணக்கிடப்பட்டது)

இந்த அறிக்கையின் படி 64 சதவீத விவசாயிகள் மாதமொன்றுக்கு வறுமைக் கோடான 700 ரூபாவுக்கு குறைவாகவே வருமானம் பெறுகின்றூர்கள். எனவே, இச்சந்தைகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் வேலை வாய்ப்பை வழங்கி மேலதிக வருமானங்களை கிராமிய மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கலாம்.

# சனசக்தி செயல் திட்டம்

## இளைஞர் கழகங்களின் பொறுப்பு

சனசக்தி செயல் திட்டத்தின் உண்மையான கருத்து இலங்கையில் வாழும் வறுமை நிலையிலுள்ள குடும்பங்களைத் தெரிவுசெய்து, அக்குடும்பங்களுக்கு இரண்டுவருட காலத்திற்கு ஏதேனும் உதவிகளைப் பெற்றுக் கொடுத்தலாகும். அக்குடும்பங்களுக்கு அங்ஙனம் உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம், அவர்களை வறுமை நிலையில் இருந்து மீட்டி வளம்பெறச் செய்ய ஜனாதிபதி அவர்கள் விரும்புகின்றார்.

இந்த சனசக்தி செயல் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பொழுது இளைஞர் கழகங்கள் பங்களிக்கக் கூடிய 04 பிரதான பிரிவுகள் உள்ளன.

01. சனசக்தி செயல் திட்டத்திற்கு உட்படும் எதிர்பார்ப்பு குழுக்களை அறிமுகப்படுத்திக் கொள்ளலும், தெரிவு செய்தலும்.


02. இக்குடும்பங்களின் நுகர்வுத் தேவைக்காக கிடைக்கும் பணத்தினை செலவிடும் பொழுது வழிகாட்டுதல்.

03. வைப்புப் பணமாக கிடைக்கும் பணத்தினை உகந்த வழியில் செலவளிக்க வழிகாட்டுதல்.

04. அக்குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு சுயதொழில்களுக்காக தேவையான பயிற்சியினை பெற்றுக் கொடுத்தல், மூலதன வசதிகளுடன் சுயதொழில்களை ஆரம்பிக்க உதவுதல்.

மேற்குறிப்பிடப்பட்ட நான்கு விடயங்கள் தொடர்பாக செயற்படும்போது, இளைஞர் கழகங்களினால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக முழுமையான விளக்கம் அளித்தல் அவசியமானதாகும்.

முதற் பிரிவு சனசக்தி செயல்திட்டத்திற்கு இலக்காகும் குழுக்களை அறிமுகப் படுத்திக் கொள்ளுதல் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்போம். இதை அறிமுகப் படுத்திக் கொள்ளுதல் என குறிப்பிட்டதன் நோக்கம் முதலில், தற்போது உணவு முத்திரைகளைப் பெறுவோர் சனசக்தி செயல் திட்டத்திற்கு உகந்தவர்களாகக் கருதப்படுவதாலாகும். எனவே, அறிமுகப்படுத்திக் கொள்வதன் முதற்படி கிராம சேவையாளர் உட்பட அரச உத்தியோகத்தர்கள், தொண்டர் சேவகர்கள், தொடர்பு கொள்ளும் குழுவொன்றின் மூலம் தற்போது உணவு முத்திரைகளைப் பெறுபவர்களையும், மற்றும் தற்போது உணவு முத்திரையைப் பெறாத போதிலும் பெற்றுக் கொள்ளக் கூடிய தகைமைகளை உடையவர்களையும் ஆராய்ந்து பார்த்தலாகும். விசேடமாக இளைஞர் கழக அங்கத்தவர்களும் இக்குழுக்களில் அங்கத்துவத்தினைப் பெறலாம். இப் பிரதிநிதித்துவத்தினைப் பெற்றுக் கொள்ள இளைஞர் கழகங்கள் முயற்சிக்க வேண்டியதுடன், இக்குழுக்களுக்கு கிராமத்தின் குழு



வாகவும், வெளியாகவும் சனசக்தி செயல் திட்டத்தின் குழுவொன்று நியமிக்கப்படும். இக் குழு கிராமத்தில் உணவு முத்திரை பெறும் மற்றும் வறுமை நிலையிலுள்ள குடும்பங்களைப் பற்றிய ஆய்வினை மேற்கொண்டு, அவர்களது சொத்துக்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்தல் வேண்டும்.

இவ்வாய்வின் மூலம் கிராமத்தில் உள்ள வறுமையான நிலையிலுள்ள குடும்பங்கள் தொடர்பாக பெற்றுக் கொள்ளப்படும் விபரங்கள் அறிக்கையாக தயார் செய்யப்பட்டு, முழு கிராமத்தினரும் ஒன்று கூடும் கூட்டத்தில் அதனை சமர்ப்பித்தல் வேண்டும். அங்கு சனசக்தி செயல் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட வேண்டிய குடும்பங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுதல் மிக முக்கியமானதாகும். இக் கூட்டத்தில் உணவு முத்திரைகளைப் பெறுபவர்களின் விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, உகந்தவர்களை மாத்திரம் தெரிவு செய்து கொள்ள சந்தர்ப்பம் ஏற்படும். பிழையான விபரங்களைச் சமர்ப்பித்து உணவு முத்திரை பெறுபவர்களை செயல் திட்டத்திலிருந்து நீக்கி உகந்தவர்களை மாத்திரம் தெரிவு செய்து கொள்வதற்கு இவ்வழி முறைகள் சாதகமாக அமைகின்றன.

தற்பொழுது சில கிராமங்களில் உணவு முத்திரை கிடைக்காமலும், எதுவித பொருளாதார வசதிகளும் இன்றி, சொத்துக்கள் இல்லாதவர்கள் இருக்கக் கூடும். அவர்கள் ஏதாவதொரு காரணத்தினால் உணவு முத்திரை செயல் திட்டத்திற்கு உள்ளடக்கப்படாமல் இருக்கலாம். மேற் குறிப்பிடப்பட்டதைப் போன்று கிராமத்தவர்கள் ஒன்று கூடும் கூட்டத்தின்போது, சனசக்திக்கு உள்ளடக்கப்பட வேண்டியவர்களை தெரிவு செய்யும் பொழுது, அப்படிப்பட்டவர்களையும் உள்ளடக்குதல் வேண்டும்.

ஆகவே இளைஞர் கழக அங்கத்தவர்கள் சகலரும் இக் கூட்டத்திற்கு சமுகமளித்தல் மிக முக்கியமானதாகும். அக்கூட்டம் ஒழுங்காக அமைக்கப்பட்டுள்ளதா? அல்லது ஒரு குறிப்பிட்டவர்கள் மாத்திரம் ஒன்று கூடி இரகசியமாக கூட்டம் நடாத்துகின்றார்களா? என கவனமாக ஆராய்ந்து பார்த்து உண்மையான, ஒழுங்கு முறையான கூட்டங்களை நடத்தும் பொறுப்பு இளைஞர் கழகங்களைச் சார்ந்ததாகும்.

அதே போன்று இக்கூட்டங்கள் தொடர்பாக அறிக்கைகள், பதிவுகளையும் வைத்துக் கொள்ளுதல் மிக முக்கியமானதாகும். இக்கூட்டத்திற்கு வந்தவர்கள் யார்? வராதவர்கள் யார்? தலைமைத்துவம் தாங்கியவர் யார்? சொற்பொழிவாற்றியவர்கள் யார்? போன்ற விடயங்களை கூட்டத்தினை நடைமுறைப்படுத்தும் உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக இளைஞர் கழகங்களினால் விசேட அறிக்கையினை வைத்திருத்தல் மிக முக்கியமானதாகும்.

இரண்டாவது கட்டமாக, இவ்வறிமுகப்படுத்திக் கொள்ளப்பட்ட இலக்கு குழுக்களுக்கு நாளாந்த நுகர்வுத் தேவைக்காக கிடைக்கும் பணத்தினை பாவிக்கும் முறைகள் தொடர்பாக இளைஞர் கழகங்கள் ஒரு கண்காணிப்பினை மேற்கொள்ளுதல் வேண்டும். இங்ஙனம் தெரிவு செய்யப்படும் குடும்பங்களுக்கு ''சனசக்தி அட்டை'' எனப்படும் அட்டை ஒன்று விநியோகிக்கப்படும். மாதத்திற்கு ஒரு முறை இவ்வட்டையினைக் கூட்டுறவுக் கடையிலோ அல்லது பதிவு செய்யப்பட்ட வர்த்தக நிலையத்திலோ சமர்ப்பித்துக் குறிப்பிட்ட தொகைப் பொருட்களை பெற முடியும். அவைகளை உகந்த வழியில் அவர்கள் பெற்றுக் கொள்கின்றார்களா என கண்காணிப்பாக இருத்தல் வேண்டும். உணவு முத்திரைகள் மூலமும், அரிசி பங்கீட்டின் மூலமும் சில ஊழல்கள் நடந்துள்ளன என்பதனை நாம் அறிவோம். சிலர் உணவு முத்திரைப் பொருட்களை பெற்று விற்கின்றார்கள். அரிசி பங்கீட்டுப் புத்தகங்களின் மூலம் பெற்ற அரிசியினை குறைந்த விலைக்கு விற்கின்றார்கள்.

சனசக்தி அட்டை மூலமும் இவைகளைப் போன்றவற்றை செய்ய முயலுபவர்கள் இருக்கலாம். இவ்வகையான ஊழல்கள் நடைபெற இடமளிக்காமல், இலக்கு குடும்பங்களுக்கு அவை சரியான முறையில் கிடைக்கின்றதா என ஆராய்தல் இளைஞர் கழகங்களின் பொறுப்பாகும். சனசக்தி அட்டையினை அடைவு வைத்து வானொலிப் பெட்டிகளை வாங்க, மதுபானம் அருந்த, கஞ்சா பாவிப்பதற்கு இடமுண்டு. இவை தொடர்பாக ஆராய்ந்து பார்க்க வேண்டியது இளைஞர் கழகங்களின் பொறுப்பாகும். இவ்வுதவி இரண்டு வருட காலத்திற்கு மட்டுமே வழங்கப்படுவதனால், இவ்வகையாக ஆராய்தல் மிக முக்கியமானதாகும். இவ்விரண்டு வருடத்தினுள் குறிப்பிட்ட குடும்பங்களை வறுமை நிலையில் இருந்து மீட்டெடுத்தல் வேண்டும். இரண்டு ஆண்டுகள் நிறைவுறும்போது, அக்குடும்பங்கள் மேன்மையான நிலையினை இத்திட்டத்திலிருந்து ஒதுக்க வேண்டும்.

எனவே குறிப்பிட்ட காலத்தினுள் அவர்கள் சனசக்தி அட்டை தொடர்பாக எங்ஙனம் செயல்படுகின்றனர்? வர்த்தக நிலையத்தினர் எங்ஙனம் செயல்படுகின்றனர்? கூட்டுறவுச் சங்கத்தின் முகாமையாளர் எங்ஙனம் செயல்படுகின்றார்? தேவையான பொருட்களை வாங்குவதற்கு அவை வர்த்தக நிலையங்களில் உள்ளனவா? சனசக்தி திட்டம் மூலம் பெறப்படும் பொருட்கள் கள்ள சந்தைக்குப் போகின்றதா? போன்றவை தொடர்பாக ஆராய்ந்து பதிவு செய்து கொள்ளும் பொறுப்புக்கள் இளைஞர் கழகங்களைச் சார்ந்ததாகும்

விசேடமாக சனசக்தி செயல் திட்டத்தின் உதவி பெறும் குடும்பங்களில் உள்ள இளைஞர், யுவதிகளை இளைஞர் கழகங்களில் இணைத்துக் கொள்ளுதல் வேண்டும். அவர்கள் மூலம் சனசக்தி செயல் திட்டம் எங்ஙனம் செயல்படுகின்றது என்பது தொடர்பாக பெற்றோருக்கு எடுத்துரைக்க முடியும். நுகர்வுத் தேவைகளுக்காக எவ்வகை உணவுகளை எடுக்க வேண்டும்? போசணை நிறைந்த உணவுகள் எவை? என்பன தொடர்பான அறிவினைப் பெற்றுக் கொடுக்க முடியும். முடியுமெனின் நுகர்வுத் தேவைக்காக பெறப்படும் பணத்தில் ஒரு தொகையினை சேமிப்பில் இட ஊக்குவிக்க முடியும். சனசக்தி அட்டைக்குக் கிடைக்கும் முழுப் பணத்தினையும் நுகர்வுத் தேவைக்காகப் பயன்படுத்த வேண்டியதில்லை. எனவே தான் ஒரு பகுதியினை சேமிப்பில் இடுவது மிகச் சிறந்ததாகும். எனவே, குறிப்பிட்ட குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு மிக நெருக்கமாக செயல்படுதல் இளைஞர் கழகங்களின் கடமையாகும். அவர்களுக்கு 'நிஸ்கோ' கூட்டுறவுச் சங்கத்தினை அறிமுகப்படுத்த வேண்டும். இந் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொழுது, சிலர் எமது வேலைகள் தொடர்பாக ஆராய நீங்கள் தேவையில்லை என கூறவும் இடமுண்டு. அதன் மறுமொழி ''இது சமூகத்தினருக்கு செய்யும் சேவையான படியினால் சமூகத்தின் ஒரு பிரிவாக அவை தொடர்பாக தேடிப் பார்ப்பதற்கு எமக்கு உரிமை உண்டு'' எனக் கூற வேண்டும்.

இதன் மூன்றாம் கட்டம் சேமிப்பிற்காக வழங்கப்படும் பணத்தினை ஜனாதிபதி அவர்களது கருத்தின் பிரகாரம் இரண்டு வருடங்களின் பின் அதற்குக் கிடைக்கும் வட்டியுடன் சேர்த்து, அவ்வறிய குடும்பத்தினை, ஏதேனுமோர் சுய தொழிலில் ஈடுபடச் செய்தல் வேண்டும். இச் செயல் திட்டத்திற்காக அவர்கள் முயற்சி செய்கின்றார்களா எனத் தேடிப் பார்க்கும் பொறுப்பு இளைஞர் கழகங்களைச் சார்ந்ததாகும். அவர்கள் இதற்காக என்ன செய்கின்றார்கள்? எவ்வகையான திட்டங்களை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளனர்? எனத் தேடிப் பார்த்தல் வேண்டும். இக் குடும்பங்களில் இளைஞர்கள் உள்ளார்கள். எனின் அவர்களுக்கு திட்டம் ஒன்றினை செயற்படுத்தும் முறைகள் தொடர்பான பயிற்சியினை பெற்றுக் கொடுத்தல் வேண்டும். கைத்தொழில் வாய்ப்புக்கள் அல்லது வர்த்தக முயற்சிகள் என்பவற்றில் ஈடுபட, வீட்டு வசதியினை ஏற்படுத்திக் கொள்ள, நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றினை பெற்றுக் கொள்ளுதல் போன்றவற்றிற்கு வழிகாட்ட இளைஞர் கழகங்களினால் முடியும்.

செயல்திட்டத்தின் நான்காவது பிரிவாக சனசக்தி திட்டத்தின் இலக்கு குழுக்களின் இளைஞர், யுவதிகளை யாதேனுமோர் தொழிலில் ஈடுபடக்கூடிய விதத்தில் தொழிற் பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல், இளைஞர் கழகங்களினால் அவ்வகையான இளைஞர், யுவதிகளை இனம் கண்டு, அவர்களுக்கு ஏற்ற பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். தொழிற் பயிற்சியினைப் பெற்றுக் கொடுக்கும்பொழுது கல்வி, தராதரம் என்பவற்றினைப் பார்த்து ஏற்ற பயிற்சியினைப் பெற்றுக் கொடுக்க வழிகாட்டுதல் வேண்டும். விசேடமாக இளைஞர் கழக சம்மேளனத்தினால் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால், தேசிய தொழில் பயிலுநர் சபையினால் பயிற்சிகள் பெற்றுக் கொடுக்க வழிகாட்ட இளைஞர் கழகங்களினால் முடியும்.

இந்நடவடிக்கைகளைச் சரிவர மேற்கொள்வதற்காக எல்லா இளைஞர் கழகங்களும் சனசக்தி செயல்திட்டம் தொடர்பான உபகுழுவினை தமது இளைஞர் கழகங்

களில் உருவாக்க வேண்டும். அவ்வுபகுழு மேற்குறிப்பிடப்பட்ட நான்கு பிரிவுகளும் தொடர்பான அறிக்கையினை குறைந்த பட்சம் மாதத்திற்கு ஒரு முறையாகிலும், ஸ்ரீலங்கா இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். இதே போன்று அவ்வறிக்கைகள் பிரதேச சபை, மாவட்ட சபை, மாகாண சபை ஆகியவற்றிற்கும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விசேடமாக நிலையத்தில் ஸ்ரீலங்கா இளைஞர் கழக சம்மேளனத்தின் சனசக்தி ஆய்வு பிரிவு ஒன்றினை செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பிரிவிற்கு சனசக்தித் திட்டம் தொடர்பாக உள்ள முறைப்பாடுகள் பெறப்பட்டு, மிக விரைவான தீர்வினைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படும். வழமையான நடைமுறையாகிய கிராம சேவகர், உதவி அரசாங்க அதிபர், கச்சேரி, மாகாண அமைச்சர், அமைச்சர்கள் எனத்தேடிப் பார்க்கும் பொழுது 2 வருட காலகட்டம் கடந்து விடுவதால், இவை போன்ற மிக விரைவான முறை ஒன்றை நடைமுறைப்படுத்தி, கம்பியூட்டர் மூலம் தேவையான நடவடிக்கைகளை மிக விரைவில் செயல்படுத்த தீர்மானித்துள்ளோம்.

விசேடமாக ஏதேனும் வர்த்தக ஸ்தாபனம் சனசக்தி அட்டையினை ஏற்க மறுப்பின், பொருட்களை விநியோகிக்க மறுப்பின், பலவிதமான பொருட்களை வேண்டும்படி கட்டாயப்படுத்தின், சனசக்தி அட்டையினை இன்னொருவருக்கு குத்தகைக்குக் கொடுப்பின், அடகு வைப்பின் அவை தொடர்பாக பெறப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக தலைமை அலுவலகத்தின் மூலம் மிக விரைவான தீர்வுகள் பெற்றுக் கொடுத்தல் இதன் குறிக்கோளாகும். இதனால் மாவட்ட சபைகள், மாகாண சபைகள் தரத்திலும் சனசக்தி திட்டம் தொடர்பான விசேட பிரிவினை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

இந்நான்கு பிரதான பிரிவுகளுக்கும் புறம்பாக இளைஞர் கழகங்களுக்குத் தொடர்பு கொள்ளக்கூடிய மிக முக்கியமான விடயம் ஒன்றுள்ளது. பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு ஒரு நேர உணவு வழங்கும் திட்டம். ஜனாதிபதி அவர்கள் இம்முறை வரவு செலவுத்திட்டத்தின் மூலம் அதற்கான நிதியினை ஒதுக்கீடு செய்வார். அந்நிதி ஒதுக்கீடு மாகாண சபைகளுக்கு வழங்கப்படும். மாகாண சபை அமைச்சர்கள் பாடசாலைகளுக்கு ஒரு வேளை உணவினைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். அந்த ஒருவேளை உணவினைத் தயாரிப்பதில், அதைப் பெற்றுக் கொடுப்பதில் ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் உதவிகளை வழங்குவதன் மூலம் அதை உகந்த முறையில் கிடைக்கின்றதா என தேடிப்பார்த்து இளைஞர் கழகங்களுக்கு இத்திட்டத்துடன் தொடர்பு கொண்டு செயற்படுத்தலாம்.

விசேடமாக இத்திட்டத்தில் உள்ள குறைபாடுகள் தொடர்பாக பாடசாலைகளின் அதிபர்கள், கிராம சேவகர்கள் பார்வையிடாமல் இருக்கலாம். அச்சந்தர்ப்பங்களில் தேசிய இளைஞர் நிலையத்தில் உள்ள ஆய்வுப் பிரிவிற்கு அனுப்பி வைப்பின், அவை தொடர்பாக மிக விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சனசக்தி திட்டம் வருங்கால இலங்கையினைப் பொறுப்பேற்க உள்ள இளைஞர், யுவதிகளுக்கு அதை சரிவரச் செயற்படுத்துதல் தொடர்பான பொறுப்பு உள்ளதென நாம் முழுமையாக உள்ளத்திலே பதித்துக் கொள்ளுதல் வேண்டும். எனவே, அதைச் சரிவர செயற்படுத்த நாம் முழுமையாக திடசங்கற்பம் பூண வேண்டும்.

**ஜே. சரித்த ரத்வத்த,**
தலைவர்,
ஸ்ரீலங்கா இளைஞர் கழக சம்மேளனம்.

## RECENT PUBLICATIONS OF THE AGRARIAN RESEARCH AND TRAINING INSTITUTE

| Research Study | Price |
|---|---|
| ● SOCIO ECONOMIC AND CONDITIONS OF COCONUT SMALL HOLDING SECTOR IN SRI LANKA<br>Asoka C. K. Sepala | 50.00 |
| ● A NEO TRADITIONAL INSTITUTION FOR IRRIGATION WATER MANAGEMENT<br>Kasyanathan, N. P., Manoharan, R. B. | 40.00 |
| ● SOCIAL SCIENCE RESEARCH METHODOLOGY-A MANUAL FOR SOCIAL SCIENCE RESEARCHERS<br>Oreilly, J P., Nikahetiya, S.B.R | 35.00 |
| ● SHIFTING FARMING-TOWARDS STABILITY-A STUDY OF FOUR RAINFED FARMING SYSTEMS IN SRI LANKA<br>Fredrick Abeyratne, Gunasena, H.P.M., Tennakoon, D. | 45.00 |
| ● INPUT USE EFFICIENCY AND PRODUCTIVITY OF RICE PRODUCTION | 10.00 |
| ● GAL OYA FARMER ORGANIZATION PROGRAMME PROGRESS AND PROSPECT<br>Ranasinghe Perera, 1. | 20.00 |
| ● GAL OYA WATER MANAGEMENT PROJECT: MID-TERM IMPACT ASSESSMENT<br>Widanapathirana, A. S., Brewer, J. D. | 50.00 |
| ● A PROCESS EVALUATION OF COCONUT CULTIVATION IN THE KURUNEGALA DISTRICT—SUB STUDY OF THE KURUNEGALA INTEGRATED RURAL DEVELOPMENT PROJECT<br>Henegedara, G. M. | 30.00 |
| ● SMALLHOLDER RUBBER REHABILITATION PROJECT: SOCIO ECONOMIC CONDITIONS OF RUBBER SMALL HOLDERS IN SRI LANKA– A PRE-PROJECT STUDY OF RATNAPURA, KALUTARA AND KEGALLE DISTRICTS<br>Jayasena, W. G., Herath, H. M. G. | 50.00 |
| ● A PRELIMINARY ASSESSMENT OF THE PERFORMANCE OF A MAJOR IRRIGATION REHABILIATION PROGRAMME: THE CASE OF TANK IRRIGATION MODERNIZATION PROJECT<br>Abeysekera, W. A. T. | 25.00 |

# PUBLICATIONS OF THE ARTI

| **Documentation Series** | **Price** |
|---|---|
| 1. CHANGE AND CONTINUITY IN VILLAGE IRRIGATION SYSTEMS Abeyratne, Mrs. S., Jayantha Perera Dr. (1986) (75) | 45.00 |
| 2. COMMUNITY FORESTRY PROJECT BASELINE SURVEY Gamage D., (1987) (76) | 60.00 |
| 3. AGRICULTURAL CREDIT IN GAL OYA IRRIGATED SETTLEMENT SYSTEM Wickramasinge G. (1987) (77) | 25.00 |
| 4. IRRIGATION AND WATER MANAGEMENT IN A PEASANT SETTLEMENT SCHEME OF SRI LANKA (A STUDY OF THE WATER MANAGEMENT PROJECT OF MINIPE) (1987) (78) | 45.00 |
| 5. A STUDY ON THE EMPLOYMENT GENERATION IN KIRINDI OYA IRRIGATION AND SETTLEMENT - Senanayake, S. M. P., Wijetunga, L. D I. (1987) (79) | 35.00 |
| 6. SOCIO ECONOMIC SURVEY - THE GALGAMUWA A. S. C. AREA (KURUNEGALA DISTRICT) Senakarachchi R. B., Jayantha Perera Dr., Kumarasiri Pathirana (1987) (80) | 30.00 |
| 7. A STUDY OF NON-CONVENTIONAL ANIMAL FEED RESOURCES IN SRI LANKA Chandrasiri, A., Kariyawasam T., Ranawana S., (1987) (82) | 65.00 |
| 8. KURUNEGALA INTEGRATED RURAL DEVELOPMENT PROJECT EX-POST EVALUATION Sepala A. C. K., Chandrasiri, J. K. M. D., Gamage, D., Jayasena, W. G., Tudawe, I., Abeysekera, W. A. T., Wanigarathne, R. D. (1988) (84) | 70.00 |
| 9. KIRINDI OYA IRRIGATION AND SETTLEMENT PROJECT : MIDPROJECT EVALUATION. Gamage, D., Wanigarathne, R. D., Wijetunga, L. D. I., Tudawe, I. (1988) (85) | 50.00 |

*INQUIRIES* :

DIRECTOR,
Agrarian Research and Training Institute,
114, Wijerama Mawatha, P. O. Box 1522
Colombo-7.

PRINTED AT THE KUMARAN PRESS, 201, DAM STREET, COLOMBO-12.